Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–15 | 31–08–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –195




# தமிழரின் நியாயபூர்வமான கோரிக்கைகளை பல்வேறு மட்டத்திலும் முன்னெடுத்துச் செல்ல முடிவு


## செயற்பாட்டுக்குழுக்கள் மூலம் நடவடிக்கை

(கிளிநொச்சி)

**தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும், தமிழ்த் தேசியம் தொடர்பான சரியான விளக்கத்தைத் தெளிவாக எடுத்துரைக்கவும், சர்வதேச ரீதியிலான இராஜதந்திர நடவடிக்கைகள் போன்றவற்றை தீவிரமாகக் கையாளவும் செயற்பாட்டுக்குழுக்களை ஆரம்பிப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா.உ களுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.**

இச்சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்த சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இச் சந்திப்பில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழர் தரப்பும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் நாங்கள் விரிவாக ஆராய்ந்திருக்கின்றோம். இதில் பல ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன. இந்த முடிவுகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி ம.உ ஆணைக்குழுவுக்கு மகஜர்

தென்மராட்சியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது குடியிருப்புக்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி மகஜரொன்றை அப்பகுதி பொது அமைப்புக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இன்று கையளிக்கவுள்ளன. தென்மராட்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினருடன் இணைந்து உசன் மற்றும் தென் மீள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய அரசியல் நிலைகுறித்தும் எதிர்கால நடவடிக்கை குறித்தும் ஆராய்ந்தோம்!

### புலிகளுடனான சந்திப்புக் குறித்து இரா. சம்பந்தன்

(கிளிநொச்சி)

தற்போதைய அரசியல் நிலைஇடைக்கால நிர்வாகம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டு இலக்கை அடைவது குறித்தும் நேற்றைய சந்திப்பில் பேசப்பட்டது இவ்வாறு நேற்றைய சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவர் இச்சந்திப்பில் என்ன பேசப்பட்டது? எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன?

இச்சந்திப்பில் பல விடையங்கள் பற்றிப் பேசப்பட்டது. தற்போதைய அரசியல் நிலை, இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதில் தற்போது நிலவுகின்ற தாமதம். எங்கள் அரசியல் இலக்குகளை அடைவதற்காக எமது வேலைத் திட்டங்களை எவ்வாறு தயார் செய்ய வேண்டும் அதனை எவ்விதமாகத் துரிதப்படுத்த வேண்டும் இதை அடைவதற்குப் பாராளு மன்றக் குழு எந்தவிதமாக இயங்க வேண்டும் போன்ற விடயங்களைப்பற்றி ஆலோசித்திருக்கின்றோம். அந்தக்



(12 ஆம் பக்கம் பார்க்க)

–தென்மராட்சியில் பாலங்களைப் புனரமைக்க–

## பாலங்களிலுள்ள படையினரின் காவலரண்களை அகற்ற வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.இல் உள்ள பாலங்களுக்கு நெருக்கமாக அமைந்துள்ள இராணுவ காவலரண்கள் மற்றும் படைமுகாம்கள் என்பன உடனடியாக அகற்றப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.இல் உள்ள முக்கியமான 5 பாலங்களை புனரமைப்புச் செய்வதில் உள்ள தடைகள் பற்றி ஆராய்வதற்கான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் இராணுவத் தளபதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள், தனியார் சிற்றூர்தி உரிமையாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிக்கும் யுகமொன்றை மீண்டும் காண மக்கள் தயாரில்லை

### - சிறி.பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நாட்டு மக்கள் குண்டு வெடிக்கும் யுகமொன்றை மீண்டும் காண்பதற்குத் தயாரில்லை என்று பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேபோன்று வீதிச்சோதனைச் சாவடிகளை அமைத்து மக்களை கஷ்ட நிலைக்கு இட்டுச் செல்வதற்கும் அரசாங்கம் தயாரில்லை. நாட்டில் 35,000இற்கு மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள் பல்வேறு தரப்பினரிடமும் காணப்படுவதாகவும் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். அவ்வாறு ஆயுதங்கள் வைத்திருப்பபோரை சட்டத்தை மீறி சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க முடியாது. அதன் காரணமாக அவ்வாறான ஆயுதங்களை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் திட்டமொன்றை வெகுவிரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு தமிழ் இளைஞர்கள் பலி

கனடாவில் ரொறன்ரோவில் சனிக்கிழமை பின்னிரவு இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

சனிக்கிழமை பின்னிரவு 11.45 மணியளவில் ரொறன்ரோவில் தமிழர்கள் வாழும் ஸ்காபுரோப் பகுதியில் இந்த வீதி விபத்து இடம் பெற்றுள்ளது. வாகன ஓட்டுநரான 24 வயதான நகுலேஸ்வரன் கந்தசாமி மற்றும் பயணியான 25 வயதான பொன்னுத்துரை நேசகுமார் ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. மழை பெய்துகொண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மூவர் வெட்டிக்கொலை

(கொழும்பு)

கடவத்த மாவரமணட்டியப் பிரதேசத்தில் மூவர் கொலை செய்யப்பட்டனர் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர்கள் கத்தியால் உடல் பாகங்களில் வெட்டப்பட்ட நிலையிலேயே கொல்லப்பட்டுள்ளனர். கடவத்த இயல பியன்வலப் பகுதியில் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ வைப்பகத்தின் முல்லைக்கிளை நாளை திறப்பு

தமிழீழ வைப்பகத்தின் முல்லைத்தீவு ஊரகக்கிளை நாளை திறந்து வைக்கப்படவுள்ளது. முல்லைத்தீவு நகரத்தில் அமைந்துள்ள இக்கிளை பகல்12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

## தம்புள்ள வாகன விபத்தில் மல்லாவி இளைஞர் பலி

(அலுவலக செய்தியாளர்)

மரக்கறிவகைகளை ஏற்றிவந்த எல்வ் ரக வாகனத்துடன் மக்கள் பேருந்து மோதியதில் எல்வ் ரக வாகனத்தில் பயணித்த இளைஞர் ஸ்தலத்திலேயே பலியானார்.

மேற்படி சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தம்புள்ளவிற்கும்,கெகிராவக்கிடையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்துத் தெரிய வருகையில் நேற்று அதிகாலை தம்புள்ள பொதுச் சந்தையிலிருந்து மரக்கறிவகைகளைகொள்முதல் செய்துகொண்டு கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த வாகனத்துடன் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மக்கள் பேருந்து மோதியதில் எல்வ் வாகனத்தின் முன்னிருக்கையிலிருந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய இந்தியத் தூதுவர் கதிர்காமருடன் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய உயர் ஸ்தானிகராக நியமனம் பெற்றுள்ள நிருபாமராவ் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் இருதரப்பு உறவுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடல் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்திலேயே நடைபெற்றுள்ளது. புதிய இந்திய உயர்ஸ்தானிகராகப் பதவி ஏற்றுள்ள நிருபாம ராவ் கடந்த 1981 ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் முதலாவது செயலாளராகப் பணியாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## வரி விளம்பரம்

### வாடகைக்கு அறை

தனியார் நிறுவனமொன்றில் வேலைபார்க்கும் ஆண் ஒருவருக்கு நீர் மின்சார வசதியுடன் கூடிய தங்குமிடம் தேவைப்படுகிறது. கந்தசாமி கோவில் அருகாமை விரும்பத்தக்கது. வசதியைப் பொறுத்து வாடகை பேசித் தீர்க்கலாம். தொடர்புக்கான முகவரி விளம்பரஇல 71 ஈழநாதம், யாழ்சாலை, கிளிநொச்சி. 15.09.2004ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும். (5017)

## குடிசை எரிந்தது

பிரமந்தனாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் குடிசை ஒன்று தீப்பிடித்து முற்றாக எரிந்தது. 23 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த தம்பிஐயா என்பவரது குடிசையே தீயினால் எரிந்தது. சம்பவ தினம் வீட்டார் கோவிலுக்குச் சென்றிருந்ததாகவும், நண்பகல் 12.30 மணியளவில் அருகில் உள்ள வயலுக்கு வைத்த நெருப்பே எரிந்து வந்து குடிசையில் பிடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் வீட்டில் உள்ள உடுபுடவைகள் உட்பட வீட்டுப் பாவனைப்பொருட்கள் எல்லாம் எரிந்து நாசமாகி விட்டதாகக் குடும்பத்தினர் கூறினர். (14)

# தேசிய க.கல்லூரிகளில் பயிற்சிபெற்ற

# 575 பேருக்கு பாடசாலைகளில் நியமனம்

தேசிய கல்வியல் கல்லூரிகளில் பயிற்சியை பூர்த்தி செய்த 575 பேர் வடக்கு கிழக்கு பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ளனர்.

இதில் சம்மாந்துறை வலயத்திற்கு 29 பேரும், அக்கரைப்பற்று வலயத்திற்கு 28 பேரும், கல்முனையில் வலயத்திற்கு 5 பேரும் ஏனையோர் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்கு கிழக்கில் நியமனம் பெற்றுள்ள 575 ஆசிரியர்களில் 400 பேர் தமிழ் மொழி மூலமாகவும், 175 பேர் சிங்கள மொழி மூலமாகவும் பயிற்றப்பட்டவர்களாவர். (32)

### மறைமுக நடவடிக்கை

திருகோணமலையில் இயங்கும் கிழக்குப் பிராந்திய மின்சார சபை அலுவலகத்தை மின்னேரியாவுக்கு மாற்றுவதற்கு மறைமுக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இதனை உடனடியாக நிறுத்துமாறும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் க. தங்கேஸ்வரி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பாக மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அவர்களுக்கு அறிக்கை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தடுப்பூசி ஏற்றல்

கண்டாவளைப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோயைத் தடுக்கும் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை கடந்த 08ஆம் திகதி மயில்வாகனபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. கிளி.மாவட்ட கால்நடை சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவும், பிரதேச த.பொ.மே.நிறுவன இணைப்பாளர் காசிநாதன் ஆகியோர் இணைந்து தடுப்பு மருந்துகள் ஏற்றினர். இதன்போது 212 மாடுகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது. இதற்கு முதல் உழவனூர் தம்பிராசபுரம் பகுதிகளில் 200 மாடுகளுக்குத் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (14)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், முல்லைத்தீவு வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளரும், பாடசாலை பொன்விழா குழு உறுப்பினருமாகிய திரு. ச. நாகரத்தினம் அவர்களின் தாயார் திருமதி. சரவணமுத்து வியாழம்மா அவர்களின் மறைவிற்கு அவரின் குடும்பத்தாரோடு எமது துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றார்கள்,
மு/ புதுக்குடியிருப்பு ம.வி.

(சி-9183)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சரவணமுத்து வியாழம்மா

எமது வலயக்கல்விப்பணிமனையில் பிரதிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றும் திரு.ச.நாகரத்தினம் அவர்களின் பாசமிகு தாயார் அமரர் வியாழம்மா அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். அன்னார் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
ஊழியர் நலன்புரிச் சங்கமும்,
வலயக்கல்விப்பணிமனை,
முல்லைத்தீவு.

(சி-10332)

## துயர் பகிர்கின்றோம்

புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தை வாழ்விடமாகக் கொண்ட அமரர் திருமதி சரவணமுத்து வியாழம்மா அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் பிள்ளைகள், பேரர்கள், பூட்டர்கள், மருமக்கள் எம் பாடசாலையின் விருத்திக்கு அயராது பாடுபட்டவர்கள் அத்தனை சேவைகளையும் அமரரின் மறைவினை மீண்டும் நினைவு கூர்ந்து அமரர் வியாழம்மா இழப்பால் துயரடையும் உற்றார், உறவினர் துயரில் நாமும் இணைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
மகாவித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு.

(சி-9184)

## துயர் பகிர்கின்றோம்



### திருமதி. சரவணமுத்து வியாழம்மா

4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1917 - 06 - 15 | 2004-08-28 |

எமது வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர் திரு.ச. கனகரத்தினம், முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. நாகரத்தினம் ஆகியோரது அன்புத் தாயார் திருமதி ச. வியாழம்மா அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிகவும் வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவாற்றாமையால் தவிக்கும் பிள்ளைகள், உறவினர்களின் ஆறாத்துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.,
புதுக்குடியிருப்பு. (சி-7185)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், முகாமைத்துவ உதவியாளர், ஊழியர்கள், பா.அ. சங்கத்தினர், பழைய மாணவர்கள்.

### முக்கிய கலந்துரையாடல்

முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட சகல உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர சமகாலக் கலந்துரையாடல் நாளை பி.ப.3.00 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஞானப்பிரகாசர் மண்டபத்தில் நடைபெறவுள்ள தால் மேற்படி கலந்துலையாடலில் பிரதேசத்திற்குட்பட்ட சகல உழவு இயந்திர உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட தொழிற் சங்கப் பொறுப்பாளர் இ.பிறையாளன் கேட்டுள்ளார். (ஆ)

### தபால் விநியோகம்

குமுழமுனைப் பகுதியில் வசித்து வரும் கருநாட்டுக்கேணி மக்களின் தபால் விநியோகம் நாளை தொடக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக முல்லை, வவுனியா தபால் அத்தியட்சகர் திரு.குமரகுருபரன் தெரிவித்தார்.

1984 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு இடம் பெயர்ந்து குமுழமுனையில் வசித்து வரும் இக்கிராம மக்களுக்கு இச்சேவை பெரிதும் உதவும் என மக்கள் தெரிவித்தனர். (20)

### கலந்துரையாடல்

எதிர்வரும் ஒகஸ்ட்டில் நடைபெறவுள்ள சர்வதேச ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவது தொடர்பான திட்டமிடல் கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமை தாங்கி இக்கலந்துரையாடலை நடாத்துவது குறிப்பிடத்தக்கது. (20)

## சாவு அறிவித்தல்


### நடராசா முத்துராசா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முத்துராசா நேற்று (30-08-2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நடராசா தம்பதிகளின் அன்பு மகனும், ஆறுமுகத்தின் மருமகனும், கருணைநாயகியின் அன்புக் கணவரும், நிர்மளா, பிறேமளா, குகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி, சரஸ்வதி (சிந்தாமணி), வடிவேலு (குஞ்சியைய்யா), ருக்குமணி, தாரணதேவி, காலஞ்சென்ற மகாலட்சுமி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சிவம்) இராஜேஸ்வரி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந்தராசா (மைக்றோ ஓட்டோ வேக்ஸ்), காலஞ்சென்ற வில்வராசா (விஜயன்), சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவரெட்டினம், காலஞ்சென்ற நடராசா, பாக்கியவதி, காலஞ்சென்ற சேனாதிராசா, துரைராசா, கணேசலிங்கம், ஜெயராணி, சிவநாதன் (சிவம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனுசா, கோபிகா, யானுகா, யனூஷன், ருசாந், கபிதா, பிரசாந், சுகர்ணியா (சுவிஸ்), லாவணியா (சுவிஸ்), அஜித் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவர். அன்னாரது இறுதிக் கிரியைகள் (01-09-2004) நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஆனந்தராசா (மருமகன்)

(5018)



# புஸ்ஸிற்கெதிரான ஊர்வலத்தில் பத்து இலட்சம் மக்கள் பங்கேற்பு

(வோஷிங்டன்)

**அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஸ்ஸிற்கெதிராக இலட்சக் கணக்கான மக்கள் நேற்று சுலோக அட்டைகளைத் தாங்கி அமெரிக்காவில் ஊர்வலம் ஒன்றை நடத்திய போது இருநூற்று ஐம்பது பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

புஸ் உனது பிள்ளையை ஈராக்கிற்கு அனுப்பி விட்டு எமது பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துவா" "புஸ் பொய்யன்" "புஸ் எமக்கு வேண்டாம்" என்பன உட்படப் பலவிதமான வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஊர்வலத்தில் பங்கு கொண்டோர் தாங்கிச் சென்றனர். அத்துடன் ஈராக்கில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரை நினைவுபடுத்தும் முகமாக சவப்பெட்டிகளையும் தாங்கி ஊர்வலகாரர் சென்றனர். சுமார் 10 இலட்சம் மக்கள் இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டதாகவும் இவ் ஊர்வலம் ஒரு மைல் நீளம் மக்கள் ஊர்வலமாக வந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.




# பங்களாதேஷில் அரசிற்கெதிராக நேற்று நான்காவது நாளாக வேலை நிறுத்தம்

(டாக்கா)

பங்களாதேஷ் அரசிற்கெதிராக நேற்று நான்காவது நாளாக வேலை நிறுத்தம் இடம் பெற்றுள்ளது.

பாடசாலைகள் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள் என்பன மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் நடை பெறவில்லை. பொலிஸ் வாகனங்களையே டாக்கா வீதிகளில் காண முடிந்ததாக சர்வதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பத்து நாட்களுக்கு முன்னர் முன்னாள் பிரதம மந்திரியும், அலாம்லீக்கட்சியின் தலைவியுமான செக்க சீனா பங்குபற்றிய கூட்டத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதில் 19 பேர் கொல்லப்பட்டு 150 பேர் காயமடைந்தனர். ஏழுக்கு மேற்பட்ட குண்டுகள் அங்கு வீசப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்திலேயே எதிர்க்கட்சியினர் வேலை நிறுத்தத்தை மேற்கொள்கின்றனர். நேற்றைய வேலை நிறுத்தம் இருவாரகாலத்தில் இடம் பெற்ற நான்காவது வேலை நிறுத்தம் என்று கூறப்படுகிறது. அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்றே எதிர்க்கட்சிகள் கோரியுள்ளனர்.

## அமெ.காவல்துறை பயிற்சியாளர் மூவர் காபூல் குண்டு வெடிப்பில் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள சர்வதேச பொலிஸ் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த காவல்துறை பயிற்சியாளர்கள் 3பேரும் ஆப்கானிஸ்தான் பொலிசார் இருவரும் இரு சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்கொலைப் படைத் தீவிரவாதியொருவர் காரில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்ததாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இக்குண்டு வெடிப்பிற்குக் காரணம் தலிபான் தீவிரவாதிகளாக இருக்கலாமென்று சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## பீகாரில் மாநில அமைச்சர் ஒருவரால் 40 பேரைக்கொண்ட தனிப்படை அமைப்பு

பீகாரில் அமைச்சர் ஒருவர் தனது தொகுதியில் உள்ள கிரிமினல் குற்றவாளிகளைச் சமாளிப்பதற்காக ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்ட தனிப்படையை உருவாக்கியிருப்பது அந்த மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் இதைக் கடுமையாக விமர்சித்துள்ள நிலையில் மாவட்ட ஆட்சியர் சட்ட நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது. ஆளும் இராஷ்டிறிய ஜனதாத் தளத்தைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜேஸ் சிங் "பயிட்டர் குறூப்" என்ற 40 பேர் கொண்ட தனிப் படையை உருவாக்கியுள்ளார். இப் படையினருக்கான ஆயுதப் பயிற்சிகளை அமைச்சரே அளித்துள்ளார்.

## மொரோக்கோ வீதிவிபத்தில் இருபத்தொன்பது பேர் உயிரிழப்பு

மொரோக்கோ நாட்டில் இடம் பெற்ற மோசமான சாலை விபத்தில் 29பேர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் மொரோக்கோ நாட்டிலுள்ள இரு சுற்றுலாத் தளங்களையும் இணைக்கும் அட்லஸ் மலைப்பாதையில் இடம் பெற்றுள்ளது. 27 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்து முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்தும் முயற்சியின் போது கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பாரவூர்தியுடன் மோதியதன் காரணமாகவே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்துக்குறித்த தகவலையறிந்த மொரோக்கோ மன்னர் முகமது காயமடைந்தவர்களுக்கு இராணுவ மருத்துவமனைகளில் சிகிச்சையளிக்க உத்தரவிட்டுள்ளார்.

### -20 கார்களுடன் மோதி-

## ஸ்பெயின் பேருந்து விபத்தில் 7 பேர் பலி; 45 பேருக்குக் காயம்

(பாரிஸ்)

பாரிஸ் பிரான்ஸ் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்ட தொடர் விபத்தில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். 45 பேர் படுகாயமடைந்தனர். பிரான்ஸ் நாட்டின் தென்மேற்கே போர்டியக்ஸ் அருகே சல்லஸ் எனுமிடத்தில் ஸ்பெயின் நாட்டு பேருந்து சென்றுகொண்டிருந்தது. அடுத்தடுத்து 20 கார்கள் மீது பேருந்து மோதியது. சங்கிலித் தொடர் போல நடந்த இந்த விபத்தில் ஏழு பேர் இறந்தனர். 45 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. இறந்த ஏழு பேரும் ஸ்பெயின் நாட்டுப் பேருந்தில் இருந்தவர்கள்.

தீயணைப்புப் படை வீரர்கள் மற்றும் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

## சோனியா காந்தி மீது ஆர்.எஸ்.எஸ்.கண்டனம்

(புதுடில்லி)

லக்னோ விடுதலைப் போராட்டத்தின் பெருமைகள் அனைத்தும் நேரு குடும்பத்தினருக்கே சொந்தம் என்பது போன்ற தோற்றத்தை உருவாக்கும் முயற்சி நடக்கிறது என்று ஆர்.எஸ்.எஸ்.தலைவர் சுதர்ஷன் சோனியாவுக்குக் கண்டனம் தெரிவித்தார். ரக்ஷா பந்தன் விழாவில் பங்கேற்க லக்னோ வந்த சுதர்ஷன் நிருபர்களிடம் கூறியதாவது: விடுதலைப் போராட்டத்தில் பலரது தியாகங்களை மறைத்து நேரு குடும்பத்தினரை மட்டுமே தியாகிகளாக அடையாளம் காட்டும் முயற்சி நடக்கிறது. பாராளுமன்ற மண்டபத்தில் வீரசாவர்க்கர் படம் வைக்க எதிர்ப்புத் தெரிவித்து சனாதிபதிக்கு சோனியா கடிதம் எழுதியிருக்கிறார். இது கண்டிக்கத்தக்கது. மகாத்மா காந்தி கொலைவழக்கில் வீரசாவர்க்கரை குற்றவாளியாக சேர்க்கச் சொன்னது ஜவகர்லால் நேருதான் விடுதலைக்குப் போராடிய வீரசாவர்க்கர் பெயரை குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்குமாறு அப்போதைய பிரதமர் நேரு உத்தரவிட்டார். இவ்வாறு சுதர்ஷன் கூறினார்.



காபூலில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் எரியும் வாகனம் ஒன்றையும், அவ்விடத்துக்கு ஒருவரையும் செல்லவிடாது தடுக்க முயலும் அமெரிக்க கூட்டுப்படையையும் காண்க.

## நேற்று சென்னையில் இடம் பெற்ற ச.மு. கூட்டணித் தலைவர்களின் கூட்டம்

(சென்னை)

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்குக கூட்டணித் தலைவர்களின் கூட்டம் சென்னையில் நேற்று இடம் பெற்றது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

முகமது அலிஜின்னாவுக்கும் ஜின்சாகர்க் கரிற்கும் வித்தியாசமில்லையென்றும் இருவரும் நாட்டுப் பிரிவினைக்கு காரணமானவர்கள் என்றும் மத்தியமைச்சர் மணிசங்கர் ஐயர் கூறியிருப்பதான செய்தி அந்த இருவரையும் மதிக்கக்கூடிய மக்களின் மனதைப் புண்படுத்துவதாகும் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி அறிக்கையொன்றில் கூறியிருக்கின்றார். நாட்டுப்பிரிவினை பாகிஷ்தான் உருவாக்கம் என்பதற்கெல்லாம் எந்தச் சூழ்நிலை காரணமாக அமைந்தது என்பதை இந்தியநாட்டு வரலாறு உணர்ந்தவர்கள் அறிந்திருக்கும்போது அமைச்சர் மணிசங்கர்ஐயர் முகமது அலி ஜின்னாலை குறிப்பிட்டுக் குற்றம் சுமத்துவது ஏற்கத்தக்கதல்ல என்றும் அந்த அறிக்கையில் மேலும குறிப்பிட்டுள்ளார்.

## பொடோ சட்டம் குறித்து ஜெயலலிதாவின் நிலைப்பாட்டைக் கண்டித்து வை.கோ உரை

(புதுடில்லி)

பொடோ சட்டத்தை திரும்பப் பெறும் மத்தியரசின் முடிவை எதிர்க்கும் தமக்கு ஆதரவு வழங்குமாறு கோரி அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ள தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் செயலை மதிமுக பொதுச் செயலாளர் வை.கோ கண்டனம் செய்துள்ளார்.

மறுமலர்ச்சி நடைப்பயணம் மேற்கொண்டிருக்கும் வை.கோ பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில்; விவசாயிகள் மற்றும் ஏழைகளின் இன்னல்களை ஜெயலலிதா புரிந்து கொள்ளவில்லையென்றும், பொடோ சட்டத்தை அமுற்படுத்துவதில் மட்டுமே அவர் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தில் தி.மு.க தலைமையிலான கூட்டணி சட்டமன்ற தேர்தலும் தொடரும் என்றும் வை.கோ மேலும் தெரிவித்தார்.

# நுரைச்சோலையில் அனல் மின் நிலையம் சிங்களக் குடியேற்றங்களுக்கே வழிவகுக்கும்!

## சுற்றுச் சூழலிற்கும் பெரும் சாபக்கேடாகுமென எச்சரிக்கை

(சிலாபம்)

**நுரைச்சோலையில் அனல் மின்சார நிலையம் நிறுவப்படுமானால் அது பிரதேசவாதிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். புத்தளம் பிரதேச மக்கள் தூசு மண்டலத்திற்குள் அகப்பட்ட ஐந்துக்களாக மாறிக் கொண்டு வருவர் என்று பேராதனைப் பல்கலைக்கழக மெய்யி யற்றுறை முதுநிலை விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.அனஸ் கூறினார்.**

நுரைச்சோலை அனல்மின் நிலையம் நிறுவப்படுவதால் எதிர் பார்க்குமளவுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்காது. அதே வேளை கடல் வளமும் பாதிப்படையும் இத்திட்டத்தின் மூலம் புதிய சிங்களக் குடியேற்றங்கள் அமையும் அபாயமும் தோன்றியுள்ளது என்றும் அவர் கூறினார்.

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புத்தளம் முஸ்லிம் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற சமாதானத்திற்கும் கல்வி அபிவிருத்திக்குமான வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் புத்தளம் நகரை அண்மித்த பகுதியில் சிமெந்துத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அப்போது இத்தொழிற்சாலை அமைவதால் புத்தளத்துக்கு பெரும் நன்மைகள் கிட்டும்;புத்தளம் ,வளம் கொழிக்கும் என்றெல்லாம் பசப்பு வார்த்தைகள் கூறப்பட்டன. ஆனால் இன்று நடைபெறுவது என்ன? தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் நச்சுப்புகை காரணமாக ஆஸ்துமா நோய்க்குப் பெயர் பெற்ற இடமாக புத்தளமும், அதை அண்மித்தபகுதிகளும் அமைந்து விட்டன.

வைத்தியசாலையிலும் தனியார் மருத்துவமனைகளிலும் இதனை கண்கூடாகப் பார்க்க முடியும்.

தெங்குச் செய்கையும் இதனால் பாதிப்படைந்துள்ளது. அதுபோல இறாற்பண்ணைகள் அமைத்து பெரும் பணம் சம்பாதிக்கலாம் என்ற நப்பாசையில் எத்தகைய திட்டமிடலும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் மக்களின் குடிநீர் பாதிப்படைந்து வருகிறது.

இத்தகைய சுற்றாடற் பிரச்சினைகள் புத்தளம், கற்பிட்டி பிரதேச மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்க, புதிதாக அனல் மின்சார நிலையம் என்ற திட்டத்தை நுரைச்சோலையில் நிறுவி இப் பிரதேசத்தைச் சொர்க்க புரியாக மாற்றப் போகிறோம் என ஆசை வார்த்தைகள் கூறப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் மக்களின் வாழ்க்கைக்கே உலை வைக்கப்படுவதை எத்தனை பேர் அறிந்து வைத்துள்ளனர்? இந்த அனல் மின்சாரத் திட்டம் மூலம் புதிதாக சிங்களக் குடியேற்றம் உருவாகப்போகிறது. பிரதேச மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் பெரிதாகக் கிடைக்கப் போவதில்லை இப் பிரதேசத்தின் தங்கச் சுரங்கம் என வர்ணிக்கப்படும் கடல் வளம் பாதிக்கப்படப் போகின்றது. இதனால் கடற்றொழிலை நம்பி வாழும் மக்கள் பெரும் நட்டமடைவர். இது இவ்வாறிருக்கையில் கற்பிட்டி பிரதேசத்தில் சில வருடங்களாக விமானப் படையினர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால், இங்குள்ள பல வீடுகள் ஆட்டங்கண்டு வருகின்றன. அவ்வப்போது உயிர்ச்சேதம், பொருட் சேதம் என்பன ஏற்படுகின்றன. எனவே சிவில் சமூகம் இது விடயத்தில் விழிப்படைய வேண்டும். அதன் மூலம் புத்தளம், கற்பிட்டி பிரதேசங்களை சுற்றாடற் தீங்கிகளிருந்து பாதுகாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முடக்கி விட வேண்டுமெனக் கூறினார்.

# தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோர் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அண்மைக்காலமாக கிளிநொச்சிப் பகுதியில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோரின் தொகை அதிகரித்து வருகின்றது.

கிளிநொச்சி வைத்தியசாலை வட்டாரங்களின் தகவல்படி கடந்த ஒருமாத இடைவெளிக்குள் 25இற்கும் மேற்பட்டவர்கள் நஞ்சருந்திய நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சிகிச்சை பெற்றவர்களில் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் அடங்குவதாகவும் கூடுதலாக முதியவர்களே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் எனவும் தெரிய வருகின்றது. அத்தோடு இவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதற்கு குடும்பத்தில் ஏற்படுகின்ற தகராறுகளே காரணமெனவும் தெரியவருகிறது. (ச,தீ)

# நியமனம் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு அழைப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் 99 பேரிற்கான முன் சேவைக்குரிய ஆரம்பக் கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் இவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அரச அதிபர் கோரியுள்ளார். தெரிவுசெய்யப்பட்டோர் பெயர் விபரங்களை மன்னார் கச்சேரி, கல்விப் பணியகம் போன்ற இடங்களில் பார்வையிடலாம். (மி)

# புனரமைப்பு

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டக் கட்டம்I வைத்தியசாலைக்கான நீர்த்தாங்கியுடன் கூடிய கிணறு புனரமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றன.

புனரமைப்பின் ஆரம்ப நடவடிக்கையான உடைந்த கற்கள் கிணற்றிலிருந்து அகற்றப்பட்டு வருகின்றன. (20)



ஒஸ்லோவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நோர்வே தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவில் நடன நிகழ்வொன்றை படத்தில் காண்க.

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலகம் திறப்பு

(மன்னார்)

மன்னாரில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலகம் நேற்று முன்தினம் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவனால் திறந்துவைக்கப் பட்டது.

மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் மாலை 3.30 மணியளவில் திறப்புவிழா நிகழ்வு இடம்பெற்றது.

அதன்பின் ஊரகதேசிய எழுச்சிப் பேரவைக் கிளைகள் அமைப்பது தொடர்பாக மன்னார் நகரப்பொறுப்பாளர் விளக்கம் கொடுத்தார். 9பேர்கொண்ட மாவட்டக் குழுவும் அமைக்கப்பட்டு மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து தேசிய எழுச்சிப்பேரவையின் செயற்பாடுகளை மாவட்டத்தில் முன்நிலைப்படுத்த வேண்டுமென பொறுப்பாளர்கள் வேண்டிக்கொண்டனர்.இதில் அடம்பன் முசலிப்பிரதேசப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். (மி)

# முல்லை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு உதவி

(முல்லை)

முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு நிகொட் திட்டத்தினூடாக விவசாய இயந்திர உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.


முல்லை மாவட்டத்தின் 10கமநல சேவைநிலையங்களுக்கும் 127 கமக்கார அமைப்புக்களுக்கும் எதிர்வரும் 11.09.2004 அன்று வழங்கப்படவுள்ளது.



18 இருசக்கர உழவு இயந்திரம் 16 இயந்திரதெளிகருவி, 50தெளிகருவி, 100 நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவே வழங்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார். (20)

# கவனிப்பற்றுக் கிடக்கும் முன்பள்ளியில் கவனம் செலுத்த வேண்டுகை

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் அமைந்துள்ள முன்பள்ளிக் கட்டடக் கூரைகள் பாரிய சேதத்திற்குள்ளாகி உள்ளதுடன் அதனை வேய்வதற்கான நடவடிக்கைகள்



இதுவரையும் மேற்கொள்ளப்படாமையானது அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தவாரம் மேற்படி முன்பள்ளியினை நேரில் பார்வையிட்டபொழுது முன்பள்ளியின் கூரைகள் சேதமடைந்த நிலையிலும் முன்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள கிணற்றில் நீர்வற்றிய நிலையில் உள்ளதனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்ததுடன் கிணற்றை சூழவுள்ள பகுதிகள் இடிந்து குன்றும் குழியுமாக இருந்ததனையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இந்த அவலங்களுக்குள்ளாகியுள்ள முன்பள்ளிக் கட்டடத்திலேயே 45 சிறார்களின் கல்விக்கற்கை செயற்பாடுகள் இதுவரை காலமும் இடம் பெற்று வந்ததெனவும் இதன் காரணமாக கடந்த இரண்டு மாதகாலமாக அருகில் அமைந்துள்ள தனியார் வீடொன்றில் வைத்தே மேற்படி சிறார்களுக்கான கற்கை செயற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் இதனை புனரமைத்துத் தரும்வண்ணம் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினருக்கு கடந்த ஒருவருடத்திற்கு மேலாக தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை இவற்றினை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் அக்கிராம மக்களுடன் கலந்துரையாடிய பொழுது தெரிவித்துள்ளனர்.

இந்த முன்பள்ளி மண்டபத்திலேயே ஆனந்தநகர், அம்பாள்குளம், விநாகபுரம், ஆகிய கிராம மக்களுக்கான ஆரம்ப சுகாதார நிலைய செயற்பாடுகள் இடம் பெற்று வருவதுடன் அம்பாள்குள கிராம அபிவிருத்தி ஒன்று



கூடல் நிகழ்வுகளும் தற்போதும் இடம் பெற்று வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். அடுத்து வரவுள்ள மாரிகாலத்திற்கு முன்பதாக மேற்படி முன்பள்ளியின் கூரையினை வேய்ந்து கிணற்றில் நீர் பெறக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதுடன் கிணற்றினை சூழவுள்ள பகுதியில் ஏற்பட்டுள்ள குன்றுகுழிகளையும் சீர்செய்து தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள மாட்டார்களாவென கிராம மக்கள் தங்கள் ஆதங்கத்தினைத் தெரிவித்துள்ளனர்.

கனகபுரச் சோதி

# அரசின் யுத்த முன்னெடுப்புக்கள் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது

## -யாழ்.மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

**சமாதானத்தைப் பற்றிப்பேசிக்கொண்டு இலங்கையரசு முன்னெடுத்துவரும் யுத்த முன்னெடுப்புக்கள் மக்களிடையேபெரும் அச்சத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனை அரசும், சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்.**

என யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்பார்ப்பதாக யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களால் தற்போது வெளியிடப்பட்டுள்ள யூலை மாதத்திற்கான மாதாந்த அறிக்கையிலேயே குடாநாட்டு மக்களின் இவ் எதிர்பார்ப்புத் தொடர்பாக பிரஸ்தாபிககப்பட்டுள்ளது. அம் மாதாந்த அறிக்கையில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதான நடவடிக்கை தொடர்பாக தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையினை இருதரப்புக்களும் தீர்த்துக்கொண்டு இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டும். இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தின் கீழேயே முன்னெடுக்கப்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தவகையில் "தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைபினை முன்வைத்து சமாதானப் பேச்சுக்களை அரசுடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவர் வி.சிறிசக்திவேல் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள இவ் அறிக்கையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களது நலன்கள், கல்வி மேம்பாடு, மிதிவெடியகற்றல் மற்றும் சர்வதேச தொண்டர் அமைப் புக்களால் முன்னெடுக்கப்படும் நலத்திட்டங்கள் என்பவை தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆங்கிலதினவிழா

யாழ்.தென்மராட்சிக்கல்வி வலய பாடசாலைகளுக் கிடையிலான ஆங்கிலதினவிழா நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணியளவில சாவகச்சேரி இந்துக கல்லூரியில் இடம்பெறவுள்ளது. தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் பங்குகொள்ளவுள்ள இவ்விழாவை சிறப்பாகக்கொண்டாட தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை ஏற்பாடுகளைச்செய்துள்ளது 33)

# முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவிலில் அகதிகள் முகாமில் உள்ள பகவான் முன்பள்ளி சிறார்களுக்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் கற்றல்உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலயுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் சிறார்களின் கல்வி வளர்ச்சியை கவனத் தில் கொண்டே இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது. (33)

# அடிப்படை வசதியற்று இயங்கும் தபாலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்டைத்தரிப்பு தபாலகம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கி வருவதாகத்தெரியவருகிறது.

பண்டைத்தரிப்பு தபால் விநியோக எல்லைகளுக்குட்பட்ட 7 தபாலகங்களுக்கு தலைமையாக விளங்கும் மேற்படி தபாலகம் இட வசதிகள், தொடர்பாடல் வசதிகள், தளபாடவசதிகள், நவீனத்துவ, வசதிகள் என்பன அற்றநிலையிலேயே இயங்கி வருவதுடன் இங்கு கடமையாற்ற ஊழியர்கள் பற்றாக்குறையும் நிலவிவருவதாகத் தெரிய வருகிறது.இதனால் இந்த தபாலகத்தின் சேவைகளில் பல பாதிப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன. (33)

### கருத்தரங்கு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் நடத்தப்பட்டு வரும் சமகால கருத்தரங்கின் 18ஆவது தொடர் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில்,தொடரப்படும் திட்டம் இனத்துவ அழிப்புக்கள், என்ற தலைப்பிலான கருத்துரையினை யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு விரிவுரையாளர் குமாரவேல் வழங்குவார். (33)

# யாழ்.இல் மீளக்குடியேறும் மக்களுக்கு ம.உ.கள் குறித்து விழிப்புணர்வு செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் படையினரால் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடியமரச் சென்றுள்ள மக்களிடையே மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலயம் என்பன இணைந்து புதிய செயற்றிட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

அந்த வகையில் படையினரது அனுமதியின் பேரில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்து மீளக்குடியேறி வாழ்ந்துவரும் மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் தன் சொந்த இடத்தில் வாழ்வதற்குள்ள உரிமைகள், இவை தொடர்பாக சட்டவரைபுகள் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்பன தொடர்பான அறிவுரைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

# அரசாங்கம் போரிற்கிழுக்கிறது புலிகள் பொறுமை காக்கின்றனர்

## -பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் புலிகளை பலவழிகளில் போரிற்கிழுக்கும் போதும் புலிகள் பொறுமை காக்கின்றார்கள் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் சங்கிலியன் மாதர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவுதின நிகழ்வுகளும், பரிசளிப்பு நிகழ்வும் நல்லூர் சங்கிலியன் ஏகாபவான் அரங்கில் மாதர்சங்கத் தலைவி சிறிமனோகரி சிவராமன் தலைமையில் இடம்பெற்றது. முதல்நிகழ்வாக மங்கல விளக்கினை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், சிறப்பு விருந்தினர் நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத்தொடர்ந்து ஆசியுரையை குமாரவேல் குருக்கள் வழங்கினார். இந் நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தியபோதே பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

சென்ற தேர்தலில் தமிழ்மக்கள் 90வீதமான ஆணையை, இடைக்கால நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கொடுக்க வேண்டுமென முன்வைத்தபோது அரசாங்கம் அதற்கு மதிப்பளிக்கவில்லை. மாறாக மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் செயல்களில் இறங்கியுள்ளது. கருணா விவகாரத்தை அரசாங்கம் கையாண்டவிதம்தமிழ மக்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் அதை நிதானமாகக் கையாண்டார்கள். ஒரு முள்ளில் பட்ட சேலையை எவ்வாறு நிதானமாக எடுக்க வேண்டுமோ அதே நிதான மாக கையாண்டார்கள் எனவே விடுதலைப புலிகளைத்தீண்டும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்ட போதும் புலிகள பொறுமைகாத்து தமது சமாதானப் பணிகளை முன்னெடுத்துச் செல்கிறார்கள் இப்படியானதொரு காலகட்டத்தில் தான்,அரசு எமது இளைஞர்கள், யுவதிகளிடையே திட்டமிட்ட கலாசாரசீரழிவுகளையும திணித்து வருகின்றதுறார்கள். எங்கள் இளைஞர்களில் அதிகமானவர்களை இன்று இன்ரநெற்கபே கவர்ந்து வைத்துள்ளது. அதேபோன்று பெண்களில் அதிகமானவர்கள் தொலைக்காட்சிக்கு அடிமையாகிப் போகின்றார்கள். இந் நிலைமாற வேண்டும். இதற்கு இம்மாதர் சங்கம் வழிகாட்டியாக அமையவேண்டும். எனக்குறிப்பிட்டாா. (36)

# வீதியைப் புனரமைக்க இராணுவம் தடை விதிப்பு

(தீவகம்)

யாழ்ப்பாணம், மண்டைதீவிற்கிடையான வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட அங்கு நிலைகொண்டுள்ள கடற்படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதாகத் தெரியவருகின்றது.

கடந்த பல வருடங்களாக மேற்படி வீதி செப்பனிடப்படாத நிலையில் காணப்படுவதால் இவ்வீதியால் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருவதால் சம்பந்தப்பட்ட தரப்பினர் அவ் வீதியை புனரமைப்புச் செய்யப் பல தடவை முயற்சி செய்து வந்தனர்.

எனினும் மண்டைதீவானது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதைக் காரணம் காட்டி அவ்வீதியைப் புனரமைப்புச் செய்ய அனுமதி மறுத்துள்ளனர். (33)

# மு.காங்கிரசின் இ.நி.யோசனை வரைபு பூர்த்தி என்கிறார் ஹஸன்அலி

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் இடைக்கால நிர்வாக சபை யோசனை வரைவு பூர்த்தியடைந்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர். ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனையில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஹசன் அலி, பேச்சுவார்த்தைகளில் இறுதித் தீர்வு குறித்து ஆராயப்படும் போது சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் காங்கிரசின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக கவனம் செலுத்தியே ஆகவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் குறித்துப் பேசுவதற்கு அரசாங்கத்தையோ, விடுதலைப் புலிகளையோ தாம் அனுமதிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்த அவர், முஸ்லிம்களிடமிருந்து ஆணை பெற்றவர்கள் என்ற நிலையில் முஸ்லிம்கள் சார்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேசுவதே பொருத்தமானதெனவும் தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரசின் இந்த இடைக்கால நிர் வாக சபை யோசனையானது, கென்யா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் அரசியலமைப்பை தயாரிப்பதில் பெரும் பங்குவகித்தவரும், ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான யாஸ் கனியின் ஆலோசனையுடன் தயாரிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேலையற்ற பட்டதாரிகளிற்கு தொழில் வழங்கும் 2ஆம் கட்டப் பட்டியல் நாளை வெளியாகும்

## -பூரண விபரம் தெரியாதென்கிறார் பிரதிநிதியமைச்சர்


(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளிற்கு தொழில் வழங்கும் திட்டத்தின்கீழ் தொழில் வாய்ப்புக்களிற்குத் தெரிவாகியுள்ள பட்டதாரிகளின் 2ஆம் கட்டப்பட்டியல் நாளை வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2ஆம் கட்டப்பட்டியலில் எத்தனை பட்டதாரிகள் அடங்குகின்றார்கள் என்பதை தம்மால் கூறமுடியாதுள்ளதாக பிரதிநிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார். குறிப்பிட்டபட்டதாரிகளினைத் தெரிவு செய்வது அரச முகாமைத்துவத் திணைக்களத்தால் சுதந்திரமாகமேற்கொள்ளப்பட்டால் எவ்வளவு பேர் தெரிவாகியுள்ளார்கள் என்பது தமக்கு அறிவிக்கப்படவில்லை யெனவும் அவர் கூறுகிறார். அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற வேலையற்ற பட்டதாரிகள் அனைவரது பெயர்களும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப் படுமெனவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார். இதே வேளை முதலாவதாக வெளியிடப்பட்ட பட்டியலில் அடங்கிய பட்ட தாரிகுளிற்கான பயிற்சிகள் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# எதென்ஸ் 2004 ஒரு தரிசனம்



சீன வீராங்கனை ஜுஹாங் ஜாங் அடிக்கும் பந்தை தடுக்கும் முயற்சியில் ரஷ்ய வீராங்கனைகள். இதில் ரஷ்யா 2 செட்கள் முன்னிலை பெற்றும் தோல்வியுற்று தங்கப்பதக்கத்தைச் சீனா விடம் பறிகொடுத்தது.



4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பிரேசிலின் வின்சன்ட் லிமா அமெரிக்காவின் மோறிஸ் கிறீன் நைஜீரியாவின் டெஜி அலியூ, ஆஸியின ஜோசுவா ஆகியோரைக் கடந்து வெற்றியிலக்கை யடைந்த பிரிட்டனின் மார்க் லூயிஸ்.




ஆர்ஜன்டீனாவைச்சேர்ந்த வால டர் ஹென்மேல் தனது நாட்டுக்குத் தங்கப்பதக்கத்தைச் சேர்ந்ததும் ஞாபகாத்தமாக மைதானத் திலுள்ள வலையையும்கொண்டு செல்வதற்கான முயற்சியில்...



ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இத்தாலியை வென்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட பிரேசில் வீரர் கில்பட்டோ கொடோய்



ஆண்களுக்கான உயரம் பாய் தலில் தனது முடிவு அறிவிக்கப் பட்டதையடுத்து குதூகலிக்கும் ரசிகர்களை அமைதிகாக்குமாறு கூறும் ரஷ்யவீரர் அலக்ஸி நிமோ.



கோலுன்றிப் பாய்தலில் வெள்ளிப்பதக்கம் வென்ற அமெரிக்காவின் ரொபி ஸ்ரீவன்சன்.




ஆண்களுக்கான மரதன் போட்டியில் தங்கம் வென்ற இத்தாலிவீரர் ஸ்ரெப்பனோ பல்டினி.



ஒலிம்பிக்கின் இறுதி நிகழ்வான மரதன் ஓட்டத்தின் போது முதலாவதாக ஓடிச்சென்ற பிரேசில் வீரர் வெண்டர்லி லிமா பார்வையாளரால் தாக்கப்படுகிறார்.



ஆண் களுக்கான கூடைப் பந்து அரையிறு தியில் ஆர்ஜன் டீனா விடம் தோல்வி கண்டதால் அமெ ரிக்க வீரர் அவன் ஜவசன் தலை குனிவுடன் காணப் படுகிறார்.



மிகக் கடினமான (69Kg) குத்துச்சண்டைப் போட்டியில் கியூபாவைச் சேர்ந்த லொறென்சோ அறகன் (வலம்) கசகஸ்தான் பக்தியர் அர்த்தஜெவ் (இடம்) அர்த்தஜெவ் உலக இரட்டைச் சம்பியனை அரகன் பின்தள்ளி தங்கம் வென்றார்.



எதென்ஸ் ஒலிம்பிக்போட்டியில் தங்கம் வென்ற ஆர்ஜன்டீனா கால்பந்து அணியினர்.




# ஓய்வடைந்தது ஓர் உன்னதம்


அணைக்கப்பட்ட ஒலிம்பிக் தீபம்

கடந்த 16 நாட்களாக உலக விளையாட்டு ரசிகர்களைத் தன்னகத்தே ஈர்த்திருந்த எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்ப நிகழ்வை ஒத்த பிரமாண்டமான நிகழ்வுடன் நிறைவு பெற்றன.

அன்று வரை பதக்க வேட்டையாடிய வீரவீராங்கனைகள் அமர்க்களமான இறுதி நாளில் கண்ணீருடன் விடை பெற்ற காட்சி மனதை உருக்கும் வகையில் அமைந்திருந்தது.

விளையாட்டுத் திருவிழா என உலகம் வர்ணிக்கும் ஒரே போட்டியான ஒலிம்பிக் பாரம்பரியம், நிறைந்த ஒலிம்பிக் போட்டிகள் பிறந்த மண்ணான கிரீஸ் நாட்டின் எதென்ஸ் நகரில் இம் முறை நடந்தது.

28ஆவது நவீன கால ஒலிம்பிக் போட்டிக்கு இதுவரை இல்லாத மாபெரும் பாதுகாப்பு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. தீவிரவாதிகளின் தாக்குதல் ஆரம்பத்தில் அபாயகரமாக இருந்ததால் பாதுகாப்பிற்கு மட்டும் பல ஆயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டது.

இந்தப் 16 நாட்களில் மனித முயற்சியின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் பல சாதனைகள் வினாடிகளில் நூற்றிற்கு ஒரு பங்கு நேரத்தில் தங்கமும், வெள்ளியும் தவறிய சம்பவங்களையும் இம் முறை காணமுடிந்தது. தொழில்நுட்பம் புகுந்து விளையாடிய ஒலிம்பிக்காகவும் இது அமைந்தது. பல்வேறு புதிய சாதனையாளர்கள் உலகிற்கு அறிமுகமாகினர். பழைய சாதனையாளர்கள் பலர் ஏமாற்றமடைந்தனர்.

இந்தியா, இலங்கையைப் பொறுத்தவரை மீண்டும் ஒரு ஏமாற்றமான ஒலிம்பிக்காகவே இதுவும் அமைந்தது. ராஜ்யவர்தன்சிங் ரத்தோர் பெற்ற வெள்ளிப் பதக்கத்துடன் இந்தியாவிற்கு ஆறுதல் அடையவே முடிந்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹொக்கி, நீளம் பாய்தலில் அஞ்சுஜோர்ய், ஆகியோரின் எதிர்பார்ப்பு ஏமாற்றமே அளித்தது.

அதே போன்று 2000 சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கத்தை இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்த சுசந்திகா ஜெயசிங்க இம்முறை போட்டியில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவு இலங்கையின் பதக்கக் கனவை முற்றாக இழக்கச்செய்தது.

இவை ஒலிம்பிக் பதக்கக் கனவை இந் நாடுகளுக்கு கனவாகவே கொள்ள வைத்துள்ளன. அடுத்து பீஜிங் போட்டிக் காக காத்திருக்க வேண்டியதுதான்.

இம் முறை ஒலிம்பிக்கில் ஆசிய நாடுகளான சீனா, ஜப்பான் வரலாறு படைத்தமை ஆசிய விளையாட்டுத் துறையில் மேன்மை அடைந்துள்ளதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

இவை ஐரோப்பிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி பதக்கவேட்டையை நடத்தின. சீனா இம்முறை பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்ததுடன், முதலிடத்தைப் பிடித்த அமெரிக்காவிற்கு இறுதிவரை சவால் விடும் நாடாக இருந்தமையும் எதென்ஸ் ஒலிம்பிக் 2004 இல் மறக்க முடியாதது.


எதென்சிலிருந்து விடை பெறும்வீரரொருவர்

இறுதியாக எதென்ஸ் நகர மேயர் தோராஒகேயானி ஒலிம்பிக் கொடியை பீஜிங் அதிகாரிகளிடம் முறைப்படி ஒப்படைத்தார். (2008ஆம் ஆண்டு 29ஆவது ஒலிம்பிக் போட்டியை சீனா நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது)

இதனைத் தொடர்ந்து பிரபல பொப் பாடகர்களின் இசை நிகழ்ச்சி அரங்கில் இருந்தவர்களை ஆரவாரப்படுத்த, இத்தனை நாட்களும், ஒரு குடும்பமாகப் பழகிய வீரவீராங்கனைகள் கண்ணீருடன் தாங்கள் படைத்த சாதனைகளை மட்டும் எதென்சில் விட்டுவிட்டு அவரவர் நாடுகளுக்கு விடைபெற்றனர்.

---

# ஏமாற்றமளித்த ஒலிம்பிக்

நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்த 28 ஆவது ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா முதலிடம் பெற்றுத் தனது வல்ல(ரசு)மையை வெளிப்படுத்தியிருக்கிறது. எனினும் அதனையும் அச்சுறுத்தும் வகையில் அடுத்த முறை தனது மண்ணில்தான் முன்னிலை வகிப்பதற்குக் கட்டியம் கூறுவது போன்று இரண்டாம் இடத்தைச் சீனா தனதாக்கிக் கொண்டுள்ளது. சீனா ஆரம்ப நிலையில் முதலாம் இடத்தைப் பிடித்திருந்தாலும் பின்னர் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு இறுதியில் இரண்டாம் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டு கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பெருமை சேர்த் துள்ளது.


அஞ்சுஜோர்ய்

எனினும் சீனாவிற்கு அடுத்ததாகப் பரப்பளவிலும், சனத்தொகையிலும் இரண்டாம் இடம் வகிக்கும் இந்தியா 73 வீரர்களைப் போட்டிக்கு அனுப்பி ஒரேயொரு வெள்ளிப் பதக்கத்தை மட்டுமே பெறமுடிந்துள்ளது. இந்தியாவில் பல உள்ளூர் சாதனையாளர்கள் இருந்தும் அது மேலும் சில வெண்கலப்பதங்கங்களையாவது கைப்பற்றித் தனது மதிப்பை உயர்த்தியிருக்க வேண்டும்.

இந்தியாவின் அஞ்சுஜோர்ய் கர்ணம் மல்லீஸ்வரி, லியாண் டர் பயஸ் மகேஸ்பூபதி இணை எவ்வாறேனும் பதங்கங்களை அள்ளிவருவார்களென எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் போட்டியில் தோல்வியைத் தழுவியது ஒருபுறமிருக்க ஊக்கமருந்துப் பாவனை கண்டு பிடிக்கப்பட்டமையானது இந்தியாவிற்கு பனையால் விழுந்தவனை மாடு மிதித்த கதை போலாகி விட்டது.


இந்திய ஹொக்கி அணி

இவற்றுக்கு முக்கிய காரணமாகத் தோன்றுவது விளையாட்டுத்துறையில் இந்தியா காட்டும் அக்கறையின்மை என்றால் பிழையேதும் இருக்கமுடியாது. முதலாவது எந்த விளையாட்டு வீரருக்கும் சிறந்தபயிற்சியளிக்க இந்திய விளையாட்டுத்துறையினர் தவறிவிடுகின்றனர். சில போட்டிகளைச் சந்திக்க ஓரிரு வாரங்கள் மட்டுமே இருக்கும் வேளையில் பயிற்சியிலீடுபடுகின்றனர் வீரர்கள். இவர்கள் தொடர்ந்தும் குறிப்பிட்ட துறையில் நீண்ட பயிற்சிபெறுவதற்கு விளையாட்டுத்துறையில் அங்கம் வகிப்போர் கவனம் செலுத்துதல் வேண்டும். அதே போன்று சிறிலங்கா ஒலிம்பிக் அணியினரும் இம்முறை வெறுங்கையோடு திரும்பி வந்தது. மிகுந்த வேதனையும் கவலையுமளிக்கிறது.

ஆரம்பத்தில் இந் நாட்டுக்கு ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்தவர் டங்கன் வைட் என்பவராவார். அதனைத் தொடர்ந்து பல வருடங்களுக்குப் பின்னர் சுசந்திக்கா இந் நாட்டுக்கு வெண்கலப் பதக்கம் பெற்றுக்கொடுத்தார். எனினும் அவர் இம் முறை போட்டிகளில் பங்கேற்காமை யார் விட்ட தவறு என்பது கேள்வி.

எனினும் சுசந்திகா ஜயசிங்கவிற்கு வெளிநாட்டுப் பயிற்சியைப் பெற்றுக்கொடுக்கத் தவறியதே அவர் இம் முறை போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போனதற்கான காரணமாகவும் பேசப்படுகிறது. 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளிலாவது இவ்விரு நாடுகளும் பதக்கங்களைப் பெற பூரண ஆதரவை வீரர்களுக்கு வழங்கி, கிரிக்கெட் போட்டிகளில் உலகில்சிறந்து விளங்குவது போல் ஏனைய விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்ப்பார்ப்பாகும்.

வடிவேல்

---

# பெருமை பெற்றுள்ள இளைஞன் பெல்ப்ஸ்



ஆறு தங்கப்பதக்கங்கள் வென்று எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் முதற்சிறந்த வீரர் என்ற பெயரை, பெருமையைப் பெற்றுவிட்டார் 19 வயது அமெரிக்க வீரர் மைக்கேல் பெல்ப்ஸ். இந்த ஒரு ஒலிம்பிக் போட்டியில் 6 தங்கப்பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளார் பெல்ப்ஸ்.

ஒரு ஒலிம்பிக்போட்டியில் 8 பதக்கங்களை வென்ற ஒரே வீரர் என்ற பெருமையை சோவியத் யூனியனின் அலெக்சாண்டர் டிட்யாடின் என்ற ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர் 1980 மொஸ்கோ ஒலிம்பிக் போட்டியில் அடைந்தார். 3 தங்கப் பதக்கங்களையும், 4 வெள்ளிகளையும், ஒரு வெண்கலத்தையும் தனது சொந்த மண்ணில் டிட்யாடின் வென்றார். அவரைப்போல் 8 பதக்கங்களை வென்றுள்ளார் பெல்ப்ஸ். ஆனால் டிட்யாடின் வென்ற தங்கப்பதக்கங்களைப்போல் இரு மடங்கு பெற்றுள்ளாரே பெல்ப்ஸ். டிட்யாடினையும் விஞ்சிவிட்டார் பெல்ப்ஸ் என்று தானே சொல்லவேண்டும். 1972 ம்யூனிக் ஒலிம்பிக் போட்டியில் 7 தங்கப்பதக்கங்களை வென்றார் அமெரிக்க நீச்சல் வீரர் மார்க் ஸ்பிட்ஸ். அது மிகப்பெரிய உலகசாதனையாக இதுவரை இருந்து வருகிறது.

அந்தச் சாதனையை முறிக்க இயலும் என்ற நம்பிக்கையோடு எதென்ஸ் வந்தவர் பெல்ப்ஸ். ஸ்பிட்ஸின் ஆசிபெற்று வந்தவர் அவர். அந்தச் சாதனையை சமன்செய்யக்கூட பெல்ப்ஸ்சுக்கு முடியாமல்போயிற்று. ஆனால் பெல்ப்ஸ்சை பெரிதும் பாராட்ட உலகம் தயங்காது. 1968 மெக்சிக்கா ஒலிம்பிக் போட்டியிலும், 1972 ம்யூனிக் ஒலிம்பிக் போட்டியிலும் சேர்த்து மொத்தம் 9 தங்கப்பதக்கங்களும், ஒரு வெள்ளியும், ஒருவெண்கலமும் வென்றார் ஸ்பிட்ஸ்.

1972 ஒலிம்பிக் போட்டியில் அவர் 7 தங்கப்பதக்கங்கள் வென்றபோது அவருக்கு தனிப்பட்டவர்களுக்கான பந்தயங்களில் 4 தங்கப்பதக்கங்கள் கிடைத்தன. (மற்ற 3 தங்கப்பதக்கங்கள் அணிகளுக்கான ரிலே பந்தயங்களில் வந்தவை) அப்போது அவருக்கு வயது 22.

எதென்ஸ் ஒலிம்பிக்போட்டியில் ஸ்பிட்ஸ் 1972 இல் வென்றது போல் தனிப்பட்டவர்களுக்கான பந்தயங்களில் 4 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளாரே பெல்ப்ஸ்.

ஸ்பிட்ஸை விட 3 வயது குறைவாக இருக்கின்ற போது இந்த 4 தங்கப்பதக்கங்களை தனிப்பட்டவர்களுக்கான பந்தயங்களில் அவர் வென்றுள்ளது ஸ்பிட்ஸே பாராட்டக்கூடிய ஒரு ஆற்றல் என்று தானே சொல்லவேண்டும்.

ஒகஸ்ட் 14 அன்று 400 மீற்றர் மெட்லி தங்கப்பதக்கத்தைப் புதிய உலக சாதனை படைத்து (4:08:26) வென்றார் பெல்ப்ஸ். " ஒன்றை வென்றாய் விட்டது. மீதம் 6 உள்ளது." என்றார் பெல்ப்ஸ். ஸ்பிட்ஸின் சாதனையை எட்டத்துடித்த பெல்ப்ஸின் பேச்சு அது. அடுத்த நாள் தென்னாபிரிக்கா 4x100 மீற்றர் ப்ரீஸ்டைல் ரிலே பந்தயத்தை வென்றது. சிட்னி ஒலிம்பிக் (2000) போட்டியில் இந்த ரிலே பந்தயத்தை அவுஸ்திரேலியா வென்றது. அது வரைக்கும் அமெரிக்க அணி வென்று வந்த ஒலிம்பிக் பந்தயம் இது. இந்த முறை போலந்துக்கு வெள்ளியும், அமெரிக்காவிற்கு வெண்கலமுமே கிடைத்தன.

ஸ்பிட்ஸின் சாதனையை முறியடிக்கும் முயற்சி பாதிக்கப்பட்டது. இந்தச் சாதனையை முறிக்க முடியாது என்று பெல்ப்ஸிற்கு ஆனது. 400 மீற்றர் மெட்லி பந்தயத்தை உலகசாதனை படைத்து வென்றார். பெல்ப்ஸ். 200 மீற்றர் பட்டர்பிளை பந்தயத்திலும், 4x200மீற்றர் பிரீஸ்டைல் ரிலே பந்தயத்திலும் தங்கம் வந்தன.

ஆனால் நூற்றாண்டின் மிகப்பெரிய ரேஸ் என்று சொல்லப்பட்ட 200 மீற்றர் ப்ரீஸ்டைல் பந்தயத்தில் ஆவுஸ்திரேலியாவின் இயன்தோர்ப் வெற்றி பெற்றார். (1:44:71) வெள்ளி போலந்து வீரர் பியடெர் வான்டென் ஹுகென்பாண்டிற்கு (1:45:23) சென்றது. பெல்ப்ஸிற்கு வெண்கலமே கிடைத்தது (1:45:32). பிறகு 100 மீற்றர் பட்டர்பிளை பந்தயத்தில் தங்கம்வென்றார் பெல்ப்ஸ் (51.25-புதிய ஒலிம்பிக் சாதனை). இவருக்கு முன் 100 மீற்றர், 200 மீற்றர் பட்டர்பிளை ஒலிம்பிக் பந்தயங்கள் இரண்டையும் ஒரு ஒலிம்பிக் போட்டியில் இருவரே வென்றுள்ளனர்.

ஒலிம்பியன்

# சிறிலங்கா அரச திணைக்களங்கள் பாரிய நட்டமடைவை எட்டியுள்ளன

### சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசாங்கத் திணைக்களங்கள் பாரிய நட்ட மடைவை எட்டியுள்ளதாக சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெல தெரிவிக்கிறார்.

எதிர்வரும் பத்தாண்டு காலத்திற்குட்பட்ட பகுதியில் இதற்கான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் குறிப்பிட்டதிணைக்களங்கள் முழுமையாக நட்டமடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

எனவே முழுமையாக மாற்றுத் திட்டங்களை முன்னெடுக்காவிட்டால் குறிப்பிட்ட திணைக்களங்கள் நட்டமடைவதனால் அது நாட்டிற்குப் பாரிய நலிவையே கொண்டுவந்துவிடும்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி,தேசிய சேமிப்பு வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை மின்சாரசபை, போக்குவரவுச் சபை, தொடருந்து திணைக்களம், வானூர்திச் சபை, மற்றும் கப்பற்கூட்டுத்தாபனம் என்பனவே நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## ரூ 10,600 கோடி மேலதிகமாகத் தேவை!

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பால் வெளிநாட்டில் பெற்ற கடன்களுக்கு வட்டி அதிகமாகச் செலுத்த வேண்டிய நிலைக்கு சிறிலங்கா அரசு தள்ளப்பட்டுள்ளதென அமைச்சின் வெளிநாட்டு நிதி திட்டமிடல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆகவே பெற்ற கடன்களுக்கு மேலதிகமாக 10,600 கோடி ரூபாய் செலுத்த வேண்டி வருமெனவும் வெளிநாட்டு நிதி திட்டமிடல் அமைப்பு தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு நாணயங்களைக் கடத்திய வர்த்தகர் சுங்க அதிகாரிகளால் கைது

(கொழும்பு)

பிரபல வர்த்தகர் ஒருவர் பெருமளவு வெளிநாட்டு நோட்டுக்களை இலங்கையில் இருந்து கடத்திச் செல்ல முற்படுகையில் சுங்கத் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் கட்டுநாயக்க வானூர்தி மையத்தில் இடம்பெற்றது. குறிப்பிட்ட வர்த்தகர் சுவீடனில் இருந்து சிற்றூர்திகளை இறக்குமதி செய்யும் பிரதான வர்த்தகர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3.5 மில்லியன் ரூபாய்களைக் கடத்திச்செல்ல முற்பட்ட இவர் தம்மை உடனடியாக விடுவிக்குமாறு சுங்க அதிகாரிகளை வலியுறுத்தியதாகவும், எனினும் அதற்கு அதிகாரிகள் இடம்தரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## இருவர் கொலை

(கொழும்பு)

செல்லக் கதிர்காமம் பகுதியில் இரண்டு பேர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தின் போது தந்தையும் மகனுமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.


## பயணியர் பேருந்துப் பணி

### புதுக்குடியிருப்பு – புளியங்குளம்

மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக 01.09.2004 ஆம் நாளிலிருந்து நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**புதுக்குடியிருப்பு – நெடுங்கேணி – புளியங்குளம்**

| | புதுக்குடியிருப்பு | கற்சிலைமடு | நெடுங்கேணி | புளியங்குளம் |
|---|---|---|---|---|
| பகல் | 2.00 | 2.45 | 3.30 – 3.50 | 4.30 |

**புளியங்குளம் – மாங்குளம் – புதுக்குடியிருப்பு**

| | புளியங்குளம் | மாங்குளம் | கற்சிலைமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|
| மாலை | 4.15 | 5.00–5.20 | 6.30 | 7.15 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழிவனுமதிப் பணியகம்.

(சி.10330)

10 ஆவது ஆண்டில்

முல்லை நகரில்....

01.09.2004 முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

தமிழீழ வைப்பகம்

வைப்பு வசதிகள்

தேட்ட வைப்புக்கள்

நிலையான வைப்புக்கள்

கடன் வசதிகள்

தங்க அடைவுக் கடன் சேவை

ஏனைய கடன் வசதிகள்

மேலும் பல வைப்பகப் பணிகள்

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

10204

# ஏழு பேர் பலி

கோவில் கட்டடம் இடிந்து 7 பேர் உயிரிழந்துள்ளனர் அத்துடன் 15 பேர் படுகாயம் அடைந்தனர். கோவையில் இந்தப் பரிதாப சம்பவம் நடந்துள்ளது. கோயம்புத்தூர் ஈச்சனாரியிலுள்ள பிரசித்தி பெற்ற மகா லட்சுமி மந்திர் கோவிலில் மண்டபம் கட்டும் பணி கடந்த 2 மாதங்களாக நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மண்டபத்திற்கு கொங்கிறீட் போடும் பணி பரபரப்பாக நடந்த போது திடீரெனப் பயங்கர சத்தத்துடன் கொங்கிறீட்டைத் தாங்கும் வகையில் நான்கு பக்கமும் 40 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட தூண்கள் உடைந்து சரிந்து விழுந்தன. இதைத் தொடர்ந்து கொங்கிறீட் தளம் முழுவதும் கட்டடத் தொழி லாளர்கள் மீது விழுந்து அமுக்கியது. இதில் 7 பேர் பலியானதுடன், 15 பேர் காயமடைந்தனர்.

## பணிநிலை வெற்றிடம்

### செக்கொட் தனியார் நிறுவனம்
### இல.74,இரத்தினபுரம்,கிளிநொச்சி

எமது நிறுவனத்தில் பணிபுரிய பின்வரும் பணிநிலைக்கு பொருத்தமானவர்கள் தேவை.

1. அலுவலக உதவியாளர் -(01)
2. மேசன்மார் -(10)
3. தொழிலாளர்கள் - (20)
4. மின்மார்க்க அமைப்பு வேலையாட்கள் -04

முன்னனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர் மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் உரிய ஆவணங்களுடன் 04.09.2004 அன்று மாலை 2.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை பின் வரும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

செக்கொட் தனியார் நிறுவனம்,
இல.74, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

பணிப்பாளர்
செக்கொட் தனியார் நிறுவனம்.

(5015)

## பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காளர் பதவி வெற்றிடம் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டதாகவும், சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் விண்ணப்பங்கள் தலைவர், வவுனியா வடக்கு, ப.நோ.கூ. சங்கம், நெடுங்கேணி எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ, நேரடியாகவோ 15.09.2004ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிடப்படல் வேண்டும். தெரிவுசெய்யப்படுபவர் 10000 ரூபா ரொக்கப்பிணையும், 10000 ரூபா ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

**பதவி** :- கணக்காளர் 104/09

**சம்பளத்திட்டம்** :- 6250.00 -10x110 - 10x120 = 9010/=
75000.00 -10x1320 -10x1440 = 102600/=

**வயதெல்லை** :- 18-45 வருடங்கள், சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

**கல்வித்தகைமை**:- அ). கூட்டுறவுப்பணியாளர் 10 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆக்குறைந்தது 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப்பணியாளர் 11ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக் குறைந்தது ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராட்சியத்தால் நடாத்தப்படும் கணக்குப் பதிவாளர் இறுதிப்பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு/கணக்காய்வுத் துறைப் பதவியொன்றில மேற்பார்வைத்தரத்தில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், அல்லது ஐக்கிய இராட்சியத்தால் நடாத்தப்படும் கணக்குப்பதிவாளர் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவன மொன்றில் கணக்கு/கணக்காய்வுத்துறைப் பதவியொன்றில் மேற்பார்வைத்தரத் தில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்தரம்/க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தி யும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவன மொன் றில் கணக்கு/கணக்காய்வுத் துறையில் மேற்பார்வைத் தரத்தில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

*தலைவர்,*
*வ.வ.ப.நோ.கூ. சங்கம்,*
*நெடுங்கேணி.*

(சி-10326)



# ஏதென்ஸ் ஒலிம்பிக்-2004 இறுதி பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெங்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 35 | 39 | 29 | 103 |
| ரஷ்யா | 27 | 27 | 38 | 92 |
| சீனா | 32 | 17 | 14 | 63 |
| அவுஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| ஜேர்மனி | 14 | 16 | 18 | 48 |
| ஜப்பான் | 16 | 09 | 12 | 37 |
| பிரான்ஸ் | 11 | 09 | 13 | 33 |
| இத்தாலி | 10 | 11 | 11 | 32 |
| தென்கொரியா | 09 | 12 | 09 | 30 |
| இங்கிலாந்து | 09 | 09 | 12 | 30 |
| கியூபா | 09 | 07 | 11 | 27 |
| உக்ரேன் | 09 | 05 | 09 | 23 |
| நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| ருமேனியா | 08 | 05 | 06 | 19 |
| ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| ஹங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| கிரீஸ் | 06 | 06 | 04 | 16 |
| பெலாரஸ் | 02 | 06 | 07 | 15 |
| கனடா | 03 | 06 | 03 | 12 |
| பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| பிரேசில் | 04 | 03 | 03 | 10 |
| துருக்கி | 03 | 03 | 04 | 10 |
| போலந்து | 03 | 02 | 05 | 10 |
| தாய்லாந்து | 03 | 01 | 04 | 08 |
| டென்மார்க் | 02 | 00 | 06 | 08 |
| கஸகஸ்தான் | 01 | 04 | 03 | 08 |
| செக்குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| ஆஸ்திரியா | 02 | 04 | 01 | 07 |
| எதியோப்பியா | .02 | 03 | 02 | 07 |
| கென்யா | 01 | 04 | 02 | 07 |
| நோர்வே | 05 | 00 | 01 | 06 |
| ஈரான் | 02 | 02 | 02 | 06 |
| சிலோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| ஆர்ஜன்டீனா | 02 | 00 | 04 | 06 |
| தென்னாபிரிக்கா | 01 | 03 | 02 | 06 |
| நியூசிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| யமேக்கா | 02 | 01 | 02 | 05 |
| உஸ்பெஸ்கிஸ்தான் | 02 | 01 | 02 | 05 |
| குரோசியா | 01 | 02 | 02 | 05 |
| எகிப்து | 01 | 01 | 03 | 05 |
| சுவிற்சர்லாந்து | 01 | 01 | 03 | 05 |

# மரதன் ஓட்டப் போட்டியில் சோகம்
## பிரேசில் வீரர் தங்கத்தை இழந்தார்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் இறுதி நிகழ்வான ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் இத்தாலிய வீரர் ஸ்ரெப் பனோபல்டினி தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

எனினும் இந்தப் போட்டி நிகழ்வின் ஆரம்பக் கட்டத்தில் முன்னிலை வகித்த பிரேசில் வீரர் தாக்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியது.

வரலாற்றுப் பெருமைமிக்க கிரேக்கத்தின் மரதனோஸ் நகரில் இருந்து மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமானது. இந்தப் போட்டி நிகழ்வில் முன்னிலை வகித்துக் கொண்டிருந்த பிரேசில் வீரர் வெண்டர்லிஸிமா போட்டியில் 35ஆவது கிலோ மீற்றர் தூரத்தில் வைத்து பார்வையாளர் ஒருவரால் தாக்கப்பட்டதால் முன்னிலையை இழக்க நேரிட்டது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

இந்தப்போட்டி நிகழ்ச்சியின் இறுதியில் இத்தாலிய வீரர் ஸ்ரெப் பனோபல்டினி தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தார் அமெரிக்க வீரர் வெள்ளிப் பதக்கத்தை வென்றதுடன் பிரேசில் வீரர் வெண்கலப் பதக்கத்தை வென்று ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். இவருக்குப் பின்னர் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.






# இந்திய இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டித்தொடர் நாளை

இந்தியா- இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் பங்கேற்கும் 3 ஒரு நாள்போட்டித்தொடர்களின் முதலாவது போட்டி நாளை காலை இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நட்வேஸ்ட் கிண்ணத்துக்காக நடக்கும் இப்போட்டி இரு அணிகளுக்கும் முக்கியமான போட்டியாகும் 2002ஆம் ஆண்டு நியூசிலாந்தையும் இங்கிலாந்தையும் வீழ்த்தி இந்தியா கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இறுதியாக ஆசியக் கிண்ணத்தைப் பறிகொடுத்த இந்திய அணியும் மேற்கிந்திய தீவுகள் அணியை 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வென்ற இங்கிலாந்து அணிக்கும் இது பலப்பரீட்சையான போட்டியாகும் போட்டி விபரம்.

செப்ரெம்பர் 1 முதலாவது ஒரு நாள் போட்டிலோடஸ் செப்ரெம்பர் 3 இரண்டாவது போட்டி. செப்ரெம்பர் 5 இறுதிப் போட்டி.

# சீனாவின் விஸ்வரூபம்

28ஆவது ஒலிம்பிக் பல ஏற்றத் தாழ்வுகளைத் தந்திருந்த போதும் சீனாவின் விஸ்வரூபம் அனைத்து நாடுகளையும் ஆச்சரியப் படுத்தியுள்ளது என்றே கூறலாம். 31 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் என்று மொத்தம் 62 பதங்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது சீனா. அடுத்து ஒலிம்பிக்கை நடத்த உள்ள நிலையில் இந்தப் பதக்க அறுவடை சீனாவிற்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது. என்றே கூறலாம். 100 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவே பயப்படும் அளவிற்கு விளையாட்டில் வல்லரசாக சீனா உருவாகிக் கொண்டிருக்கிறது. கடந்த 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் 28 தங்கம்,16 வெள்ளி, 15 வெண்கலத்துடன் மொத்தம் 58 பதக்கங்களைப் பெற்றது சீனா. எதென்ஸில் 20 தங்கம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வந்த சீனா தன்னுடைய திறமையைக் கண்டு பெருமிதம் கொண்டுள்ளது. மற்ற நாடுகளைப் போல் அல்லாமல் உலகச் சம்பியன், நடப்பு ஒலிம்பிக் சம்பியன் போன்றவர்களை அனுப்பாமல் புதிய இளமைப் பட்டாளத்தை அனுப்பியது எதென்ஸில் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

# பிரதேச முன்பள்ளி சிறார்களின் ஆக்கப் பொருட் கண்காட்சி

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பிரதேச முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி நிகழ்வு கடந்த வியாழன்று மு.ப.10.00 மணிக்கு அப்பகுதி முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக்குழுத் தலைவர் ஜெயம் சபாபதி தலைமையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஞானப்பிரகாசர் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

மேற்படி நிகழ்வின் ஆரம்பத்தில் சிறார்களின் பாண்ட்வாத்தியம் இஃசைக்க சிறார்கள் அணிவகுத்து மலர்தூவ பிரதம விருந்தினர்கள் கல்லூரியின் முதன்மைக் காரியாலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர். அலங்கரிக்கப்பட்ட கண்காட்சி மண்டப முன்றலில் அமைக்கப்பட்டிருந்த பொதுச் சுடரினை முல்லை மக்கள் நலன் புரிச்சங்க இணைப்பாளர் நிவேகாந்தன் ஏற்றிவைக்க, மங்கல விளக்கினைக் கடற்புலிகளின் அளம்பில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ்மன்னன், முல்லை கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை போராளி இளவேனில் மாஸ்டர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து, ஏனைய நிறுவனக் கொடிகளும் ஏற்றப்பட்டன.

அதையடுத்து 25இற்கும் மேற்பட்ட முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி மண்டபத்தினைச் சம்பிரதாய பூர்வமாக அளம்பில் பிரதேச பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து மண்டப அரங்கத்தில் முல்லைவலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செல்வி கலைவாணி வரவேற்புரை நிகழ்த்தியதையடுத்து நிகழ்வுக்கான ஆசியுரையினை யூட்அமலதாஸ் அடிகள் நிகழ்த்தினார். கருத்துரைகளை உதவிக்கல்விப்பணிப்பாளர் அருணாசலம், கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பாளர் சிலம்பரசன், முல்லை வலயப் பிரதி கல்விப் பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம் ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து யூட் அமலதாஸ் அடிகளார் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம் ஆகியோர் கண்காட்சியினைப் பார்வையிட்டு ஆரம்பித்து வைக்கப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என பெருமளவானோர் பார்வையிட்டனர். இறுதியில் முள்ளியவளைக் கோட்ட முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செல்வி.பிரதீஸ்வரியின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது.

(ஆ)

## 'பாஜ்' நிறுவனத்தால் உணவற்ற பொருள் வழங்கல்

(முல்லை)

கரைதுறைப்பற்று பிரதேசச் செய ருக்குட்பட்ட பிரதேசத்தின் பூதன் யற் கிராமத்தில் பாஜ் (BA. நிறுவனத்தினால் ரூபா 5000 பெறுமதியான உணவற்ற பொருட்கள் வழங்கப்பட்டன. சுமார் 200 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு கடந்த 27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வழங்கப்பட்டதென முல்லை மக்கள் நலன் புரிச்சங்க இணைப்பாளர் நிவேகாந்தன் தெரிவித்தார். இதே போன்று முல்லைத்தீவிலும் வழங்கப்படவுள்ளது.

(20)

# அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்தால் கண்காணிப்புப் பணியிலிருந்து அகலத்தயார்!

## - போ.நி.க.கு. பிரதித்தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கவலை கொள்ளப் போவதில்லை என இலங்கைபோர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பக்கச் சார்பாகச் செயற்பட்டு வருவதாக சிறிலங்காவின் பிரதிப் படைத்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர உள்ளிட்ட சிலரால் முன்வைக்கப்பட்ட குற்றசாட்டுத் தொடர்பாகவே கண்காணிப்புக் குழுவினர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளனர். தமது சேவை தேவையில்லையென சிறிலங்கா அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை, கண்காணிப்புப் பணியில் இருந்து தாம் விலகிக் கொள்ளப் போவதில்லை எனவும், கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் கெல்லா லெஸ்னன் தெரிவித்துள்ளார். அத்துடன், தனியொரு அரசியல்வாதியால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அரசாங்கத்தின் கருத்தாக அமைய முடியாதென்பதைதான்நன்குஅறிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறிலங்காப் பிரதிப் படைத்துறை அமைச்சரின் கருத்துக்கள் யதார்த்தத்திற்கு முரணானவை

## கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதிப் படைத்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவால் அண்மைக் காலமாகத் தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்கள் குறித்து தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் பலத்த விமர்சனங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

படைத்துறை அமைச்சரான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கையில் இல்லாத நிலையில், பதில் படைத்துறை அமைச்சராகக் கடமையாற்றிவரும் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்ட கருத்துக்களை அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகின்றார். விடுதலைப்புலிகளுடன் மீண்டும் போரிடத்தயார் என்பது போல அமைச்சர் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் யதார்த்தத் துக்கு முரணானவை என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ள கொடகே என்பவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் போர் நிறுத்த உடன்படிக்கையை முறிப்பதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளாரா என்று கேள்வி எழுப்பியுள்ள கொடகே, போர் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு சிறிலங்காப் படையினர் எவ்வளவு தூரம் தயாராக இருக்கின்றனர் என்றும் வினவியுள்ளார்.

கடந்த காலத்தில் தீச்சுவாலை படை நடவடிக்கை, ஆனையிறவு முகாம் தாக்குதல் மற்றும் கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதல் போன்றவற்றில் படையினர் சந்தித்த இழப்புக்களையும், அதனால் சிறிலங்காவுக்கு ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியையும் அவ்வளவு சுலபத்தில் மறந்துவிடமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், போர் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து சிந்திப்பதை விட்டுவிட்டு, 2002 ஆம் ஆண்டு ஒஸ்லோவில் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கு அமைய, சமஸ்டி அடிப்படையிலான தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் அமைச்சருக்கு ஆலோசனை கூறியுள்ளார். இலங்கையில் மீண்டும் ஒரு போர் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால், அதனை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதையும் அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் கொடகே தனது கட்டுரையில் கேட்டுக் கொண்டுள்ளார். அதே வேளை, இலங்கையின் சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தரை மாற்றுவது குறித்தும், புதிய கண்காணிப்புக் குழுவினரை ஈடுபடுத்துவது குறித்தும் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் கொடகே ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வரைந்துள்ள தனது பத்தியில் விசனம் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால் அழித்து விட முடியாது ; உலக வரலாறு பகரும் உண்மை இது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 31-08-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## ஜே.வி.பியின் பூச்சுற்றல்

சிங்கள மக்களின் காதில் பூச்சுற்ற முனைகின்றது ஜே.வி.பி. பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை, விலைவாசி ஏற்றம் போன்ற விடயங்களில் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் இவ்வாறானதாகவே உள்ளன. இதன்மூலம் மக்களை மடையர்களாகவும், தம்மைப் புத்திசாலிகள் போன்றும் அது எண்ணிக்கொள்வதுபோல் தெரிகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் தேர்தல் கூட்டிற்குவந்த போது, தமது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் நாட்டிலுள்ள அனைத்து வேலையற்றபட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும்; அரச ஊழியர்களின் சம்பளம் 70சதவீதத்தால் அதிகரிக்கப்படும்; விலைவாசி ஏற்றம் தடுத்து நிறுத்தப்படும் என்பது போன்ற வாக்குறுதிகளை ஜே.வி.பி உள்ளிட்ட இக்கூட்டணியினர் சிங்கள மக்களுக்கு வாரிவழங்கினர்.

சிங்கள மக்களும் இத்தகைய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவது சாத்தியமா? இல்லையா? என்பதுபற்றி கேள்வி எதனையும் கேட்காது தமது வாக்குகளை வாரிவழங்கினர். இக்கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தேனாறும், பாலாறும் ஓடும் எனச் சிங்கள மக்கள் எவ்வாறு முடிவிற்கு வந்தார்களோ தெரியாது.

ஆனால், ஜே.வி.பியினர் இதன்மூலம் ஒன்றைத் தெளிவாகவே புரிந்துகொண்டுள்ளதுபோல் உள்ளது. அதாவது மக்களை மந்தைகளாக எண்ணி எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம் அவர்களுக்குச் சிந்திக்கும் ஆற்றல் என்பதே இல்லை. அன்றி அவ்வாற்றல் மங்கிப்போய்விட்டது என்பதே அம்முடிவாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில் ஜே.வி.பியினர் நேரத்திற்கு ஒருபேச்சிலும், செயலிலும் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். அதிலும் குறிப்பாக சில வேளைகளில் தாமே ஆட்சியாளர்கள் போன்றும், சிலவேளைகளில் தமக்கும் ஆட்சிக்கும் தொடர்பில்லை என்பதுபோன்றும் பேசமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்த அமுலாக்கம் என்பன போன்ற விடயங்கள் வரும்போது "தாமே ஆட்சியாளர்கள்; தமது அங்கீகாரமோ, அனுமதியோ இன்றி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிடுவோம்" என்பது ஜே.வி.பியின் எச்சரிக்கையாகவுள்ளது.

ஜே.வி.பியினரின் கூற்றுக்களிலேயே கூறுவதானால் "ஆட்சியில் நாங்கள் பங்காளிகள் அல்ல; நாங்களே ஆட்சியாளர்கள். ஆகையினால் இடைக்காலதன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடயங்கள் குறித்துத் தனித்துவமாக சனாதிபதி முடிவெதுவும் எடுக்கமுடியாது; அதனையும் மீறிச் சனாதிபதி விடுதலைப் புலிகளுடன் பேசுவாரேயானால் அரசாங்கத்தைவிட்டு வெளியேறிவிடுவோம்" என்பது ஜே.வி.பியின் எச்சரிக்கை.

ஆனால், வேலையில்லாப் பிரச்சினை, விலைவாசி ஏற்றம், சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமை போன்ற விடயங்கள் வரும்போது ஆட்சியில் தமக்குப் பங்கில்லை என்பது போன்றும், தொழிற்சங்கங்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாது போனால் தாம் வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் எச்சரிக்கை விடுக்கின்றனர் ஜே.வி.பியினர்.

இத்தகையதொரு எச்சரிக்கையே "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் உழைக்கும் வர்க்கத்தினருக்குச் சார்பான அரசாங்கம் அல்ல. ஆனால் அரசாங்கத்தை அமைக்க ஆணைவழங்கியவர்கள் உழைக்கும் வர்க்கத்தினரே. இன்று அவர்களை மறந்து அரசாங்கம் செயற்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பாரிய தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்" என்ற கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சர் கே.ரீ.லால் கந்தாவின் கூற்றுக்கள் ஆகும்.

ஜே.வி.பியினரின் இவ் இரட்டை வேடமானது தனியாக அரசாங்கம் தொடர்பானது மட்டுமல்ல. அவர்களின் அடிப்படைக் கொள்கை தொடர்பானதாகவும் உள்ளது. அதாவது இடதுசாரிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் அவர்கள் இனவாதிகளாகவே தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

அவ்வாறு இரட்டைவேடம் போடாதவர்களாக ஜே.வி.பியினர் இருப்பார்களேயானால் மக்களை இவ்வாறாக ஏமாற்றும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்பதற்கான தார்மீகப் பொறுப்பேற்றுத் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருத்தல் வேண்டும். அத்தகைய இதயசுத்தியின்றித் தமது பதவிகளைத் தக்க வைத்துக்கொண்டு தாம் பங்கேற்கும் அரசாங்கத்திற்கெதிராகவே போராடப் போவதாகக் கூறுவதும், எச்சரிப்பதும் மக்களை ஏமாற்றும்/ மடையர்களாக்கும் முயற்சியாக அல்லாது வேறு எதுவாக இருக்கமுடியும்.

# திருமலை வளாகம் குறித்த வேலைத்திட்டங்கள் கோணேசபுரியில் மேற்கொள்ளப்படும்

(திருகோணமலை)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் தொடர்பான புதிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் வளாகத்திற்கென நிலா வெளிக்கு அருகில் கோணேசபுரியில் ஒதுக்கப்பட்ட சுமார் 200 ஏக்கர் காணியிலே மேற்கொள்ளப்படும்

எக்காரணங் கொண்டும் திருகோணமலை நகரில் தற்போது வளாகம் இயங்கும் கட்டடங்கள் அமைந்துள்ள பகுதியில் புதிய அபிவிருத்தி வேலைத் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போது இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் திருகோணமலைவளாக அபிவிருத்தி தொடர்பாக கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் கடந்தவார இறுதியில் ஹோட்டல் கிளப் ஓசியானிக்கில் நடத்திய ஒரு நாள் பட்டறையில் தெரிவிக்கப்பட்டது.

"கோணேசபுரியில் அமைய விருக்கும் திருமலை வளாகம் எதிர்காலத்தில் பூரணமாக பல்கலைக்கழகம் உதயமாகும்." என்று திருகோண மலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராசம்பந்தன் பட்டறையில் முக்கிய உரை நிகழ்த்து கையில் நம்பிகை வெளியிட்டார். கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ் ரவீந்திரநாத் பேசும்போது " திருமலை பல்கலைக்கழகவளாகத்தை திரு கோணமலை நகரிலிருந்து கோணேசபுரியில் அதற்கென ஒதுக்கப்பட்ட சொந்தக் காணிக்கு இடமாற்றம் செய்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு 90.1 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இப்பணத்தில் 20 மில்லியன் ரூபா உடனடியாக வளாகத்தை இடம்மாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகமும் தனது பங்காக 3 மில்லியன் ரூபாவை வழங்குகின்றது. தற்போது திருமலை நகரில் உள்ள செயற்பாட்டை கோணேசபுரிக்கு இட மாற்றம் செய்வதே முதல் பணியாக அமையும். என்று தனது அங்குரார்ப்பண உரையில் கூறினார். கோணேசபுரியில் அமையப்போகும் திருமலைவளாகம் முழுமையான பல்கலைக் கழகமாக கால ஓட்டத்தில் தோற்றம் பெறுவதற்கு சமூகம், சர்வதேச நிறுவனங்கள் முதலியவற்றின் ஆதரவு தேவை. அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இப்பட்டறையின் நோக்கம்" என்று உபவேந்தர் ரவீந்திரநாத் தெரிவித்தார். இந்நிகழ்வில் திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ண சிங்கம் விடுதலைப் புலிகள் திருமலை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியின்பன், கல்லூரி அதிபர்கள், கல்விமான்கள், அரசதிணைக்களங் களின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் பங்குபற்றினர். (25)

# தந்தையை கொலைக் குற்றத்திலிருந்து காப்பாற்ற போலி அமெ.டொலர்களை அச்சிட்ட மகன் கைது

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்த காலத்தில் செய்த கொலைக் குற்றத்திற்காக ஆயுட்காலத் தண்டனை அனுபவித்து வரும் தந்தையைக் காப்பாற்ற பத்து இலட்சம் போலி அமெரிக்க டொலர் நோட்டுக்களை அச்சடித்தாகக் கூறப்படும் பதினாறு வயதுப் பாடசாலை மாணவன் ஒருவர் சிறிலங்கா காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கண்டியில் உள்ள இவரிடம் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட டொலர் நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக கண்டி சிறிலங்கா காவல்துறையினர் தெரிவித்துள்ளனர் இதன் பெறுமதி ஒன்றரை மில்லியன்ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர் கண்டி சிறிலங்கா நகரில் அமைந்துள்ள இடம் ஒன்றில்வைத்து இந்த அமெரிக்க நோட்டுக்களை அச்சிட்டதாக சிறிலங்காகாவல் துறையினர் அறிவித்துள்ளனர். குற்றம் ஒன்றுக்காக சிறையில் இருக்கும் தமது தந்தையை பிணையில் எடுக்கவே இவவாறான சட்டவிரோத டொலர் நோட்டுக்களை அச்சிட்டதாக குறிப்பிட்ட மாணவன் சிறிலங்கா காவல்துறையினரிடம் தெரி வித்துள்ளார். (32)

# பெற்றோலியக் கூட்டுத்தாபன விவகாரம் ; இரு அமைச்சர்களிடையே முரண்பாடு

சிறிலங்காவின் பெற்றோலியக் கூட்டுத்தபான விவகாரம் மேலும் சூடு பிடித்துள்ளது. இதனைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு எதிராக அண்மையில் ஜே.வி.பி சார்பு தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதுடன் இரு அமைச்சர்களுக்கிடையில் மோதலையும் உருவாக்கியது.

மின்சக்தி எரிபொருள் விவகார அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தனியார் மயமாக்கம் செய்யப்படாது என்ற தனது நிலையில் மாற்றமில்லை என்றும் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் தனக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அதே வேளை நீதியமைச்சர் சரத் அமுனுகம வேறுவிதமான நிலைப்பாட்டில் இருப்பதாக பெற்றோலிக் கூட்டுத்தாபனம் தெரிவிக்கிறது. அதாவது தனியார் மயமாக்கல் தொடர்பில் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் அது கைவிடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்விவகாரமும் பஸ் கட்டணம், ரயில்வே கட்டண உயர்வும் பெரிய பூதாகரமான பிரச்சினையாகவிருப்பதாகவும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக்கு விடுத்துள்ள அறிக்கையில் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டிருப்பதாவது ஐ.ம.சு. முன்னணிக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குமிடையிலான ஒப்பந்தத்தின் படி தனியார் மயப்படுத்தல் நடைபெறாது என்று கூட்டுத்தாபனத்துக்கு அண்மைக் காலங்களில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தனியார் மயப்படுத்தலை நிறுத்தக் கோரி அரசாங்கத்துக்கு வர்த்தக சம்மேளனம் அழுத்தம் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தற்போது லண்டனில் தங்கியிருக்கும் சந்திரிகா நாடு திரும்பியதும் இது பற்றிக் கலந்தாலோசிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# காணியை விற்பதாகக் கூறி பணம் வாங்கி ஏமாற்றியவருக்குப் பிணை

வவுனியா நெளுக்குளம் பாலாமைக்கல் என்ற இடத்தில் உள்ள காணி ஒன்றினை வவுனியாவில் பணியாற்றி வரும் வைத்திய அதிகாரி ஒருவருக்குத் தருவதாக ஏமாற்றிய நபர் ஒருவர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று அவர் தனது குற்றத்தை ஒப்பு கொண்டதன் காரணமாக வவுனியா நீதி மன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் மேற்படி நபர் தனது காணியான 22 பரப்புப்பினை விற்பனை செய்வதாகவும் முற்பணமாக 5 இலட்சத்து 80 ஆயிரத்தினைப் பெற்றுள்ளார் எனினும் வவுனியாவில் தற்போது காணியின் விலைஅதிகளவாகப் போவதன் காரணமாக காணியினைக் கொடுக்காமல் ஏமாற்றி வந்ததுடன் பணத்தினையும் செலவு செய்து விட்டார் பணத்தினைக் கொடுத்தவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்தார் இதனை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டு நேற்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர் செய்த போது அவர் தனது குற்றத்தினை ஒப்பு கொண்டதுடன் பணத்தினை மீளசெலுத்தவும் ஒப்பு கொண்டுள்ளார் இதனை அடுத்து சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (21)

# போலி விசாவில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பியவர் கைது

வவுனியாவில் ஒருவருக்கு வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி போலி விசாவில் அனுப்பிய நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அண்மை நாட்களாக வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி இவ்வாறான மோசடிகளில்சிலர் ஈடுபடுவதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர். டோகா என்ற இடத்தில் வேலை பெற்றுத் தருவதாக ஒருவர் 1இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் வாங்கிக்கொண்டு போலிவிசாவில் குறிப்பிட்ட நபரினை வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார். வெளிநாட்டுக்குச்சென்ற நபர் உரிய விசாவில் வரவில்லை என்றுடோகா நாட்டில் வைத்துத் திருப்பி அனுப்பியுள்ளார். இதனை அடுத்து திரும்பி வந்த நபர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்துத் சந்தேக நபர் வவுனியா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (21)

## வெளிச்சம் சஞ்சிகை இன்று வெளிவருகிறது

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் கலை, இலக்கிய, சமூக இதழான வெளிச்சத்தின் எண்பத்தேழாவது இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, கல்வயல் வே.குமார சாமி, சித்தாந்தன், துன்னாலை செல்வம், புதுவை இரத்தினதுரை, ஞாலவன், சோ,ச.பத்மநாதன், அம புலி, த.ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகளும், சாந்தன், அஜந்தி, ஆதிலட்சுமி சிவகுமார், செ.யோக நாதன், ஆர்.கே. ஆகியோரின் சிறு கதைகளும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் செங்கை யாழியான், ஞானரதன் ஆகியோரின் கட்டுரைத் தொடர்களும் அ.இரவி, தூயவன் ஆகியோரின் ஏனைய கட்டுரைகளும் அடங்குகின்றன. மேலும் எஸ்.சிவ மலர், ந.சத்தியபாலன் ஆகியோரின் நூல் மதிப்பீட்டுரைகளும், இராஜதர்ம ராஜாவின் நேர் காணலும் இடம் பெற்றிருக்கின்றன.

## பாலங்களிலுள்ள...

சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன் போது கைதடிப்பாலம், நாவற் குழிப்பாலம், வண்ணாத்திப் பாலம் வல்வைப்பாலம் ஆகிய பாலங்கள் உட்பட யொழ்.இல் உள்ள முக்கிய பாலங்களின் புனரமைப்பு வேலைகள் உடனடி யாக ஆரம்பிக்கவுள்ளதால் இவ்வா றான பாலங்களை அண்மித்து நிலை கொண்டுள்ள படையினர் அங்கி ருந்து விலக வேண்டுமென அதிகாரி களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பல புனரமைப்பு வேலைகள் இடம்பெறும் வேலை களில் மக்கள் மாற்று வழியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள் ளப்பட்டன. (33,27)

## கனடாவில்...

டிருந்த போது இவர்கள் பயணம் செய்த வாகனம் வீதியை விட்டு விலகி மற்றுமோர்வாகனத் துடன் மோதியுள்ளது. இதன் காரணமாக இந்த அனர்த் தம் நிகழ்ந்துள்ளதாக ஆரம்பப் பொலிஸ் விசாரணைகள் மூலம் அறிய வந் துள்ளது. விபத்தில் பலியான இரண்டு தமிழ் இளைஞர்களின் இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகள் உறவி னர்களால் மேற்கொள்ளப் படுகின்றன. பலியான இளைஞர் களில் ஒருவரின் தகப்பனார் இந்த அனர்த்தம் குறித்து அறிந்தவுடன் மயக்கமடைந்த நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக இணையத்தளம் ஒன்று கூறுகின்றது.

## தற்போதைய...

கருமங்களை முன்னெடுப் பதற்காக சில வெவ்வேறு குழுக் கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையாக இணைந்து இலக்கை அடைய வேண்டுமென்பது எமது தீர்மானம்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தென்பகுதியில் ஜே.வி.பி, சிகல உறுமய போன்ற கட்சிகள் தீவிரமான எதிர்ப்புக் காட்டி வருகின்றன. இதனை முறியடிக்க தமிழ் தேசியக் கூட்ட மைப்பு எந்த வகையில் நடவ டிக்கை எடுக்கவுள்ளது?

இது தொடர்பாக நாங்கள் பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் செயற்பட வேண்டு மென்ற முடிவை எடுத்திருக்கின் றோம். அத்தோடு தென்பகுதி மக்கள் மத்தியில் இது தொடர் பாகப் போதிய விளக்கமளிக்க வேண்டுமென்ற முடிவையும் எடுத்துள்ளோம். மேலும் முஸ்லிம

## மூவர்...

வீடொன்றிற்குள் பிரவேசித்த குழுவினர் அங்கிருந்து இருவரை வெட்டிக் கொலை செய்துள்ளனர்

இதன் பின்னர் அந்த குழுவினர் பிரதேசத்தில் உள்ள மற்றும் ஒரு வீட்டினுள் புகுந்து அங்கிருந்த பெண் ஒருவரை வெட்டி கொன்ற னர். தனிப்பட்ட முறுகலே இந்தக் கொலைகளுக்குக் காரணம் எனத் தெரியவந்துள்ளது. (32)

மக்களுக்கும், சர்வதேச சமூகத் திற்கும் எமது நிலைப்பாட்டை விளக்கி அவர்களின் ஆதரவை யும் பெறவுள்ளோம். சர்வதேச சமூகத்தினரை நாங்கள் பலதட வைகள் சந்தித்திருந்த போதும் மேலதிகமாக எமது நியாயத்தை அவர்களுக்கு விளக்கி இடைக் கால நிர்வாகசபை தொடர்பாகத் தென்பகுதியினர் கதைக்க மறுப் பதை அவர்களுக்கு விளக்கவுள் ளோம்.

இந்த விடையம் தொடர்பாக இந்தியாவின் ஆதரவைப் பெற அங்கு சென்று கதைப்பது தொடர்பாக என்ன முடிவு எடுத்துள்ளீர்கள்?

இந்தியாவுக்கும் எமக்கும் ஒரு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் நாங்கள் எல்லோரும் ஆர்வமாக உள் ளோம். விடுதலைப்புலிகளும் அவ் வாறே உள்ளனர். தமிழ் நாட்டு அரசுடன் இது தொடர்பாகப் பேசவுள்ளோம். இந்த நடவடிக் கைகள் எவ்வாறு அமையும் என் பதை பின்னர்தான் தெளிவுபடுத்த முடியும்.

இடைக்கால நிர்வாகம் தொடர் பாகப் பாராளுமன்றத்தில் நடத்த வுள்ள விவாதத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமது கடமைகளை எந்த விதத்தில் முன்னெடுக்க வுள்ளது?

இது தொடர்பாக நாம் முன்னர் கால அவகாசம் கேட்டிருந்தோம். இப்போது நாம் தயாராக உள்ள நிலையில் விவாதத்திற்குக் கேட்ட

அவர்கள் இதனை மு... பதாகத் தெரியவில்... தொடர்பாக பா... கவனத்தை ஈர்த்து ... சர்வதேச சமூகத்தி... மக்களுக்கும் உண்மை ... யைத் தெரியப்படுத்தத் ... நடவடிக்கையை நாங்கள் ... கொள்வோம்.

இடை நிறுத்தப்பட்டுள்ள... சுக்களை மீண்டும் எவ்... தொடர்வது என விடுத... புலிகளுடன் ஆராய்ந்தீர்க...

ஆம். எமது நடவடிக்கை... பகுதிமக்கள், முஸ்லிம் ம... சர்வதேச சமூகம் ஆகியோ... நிலைமையை எடுத்துக்க... வுள்ளோம். இதை விட ... மாதம் 10 ஆம் திகதி சன... தியை சந்தித்திருந்தோம். ... போது அவர் ஆரம்பத்தில் ... இடைக்கால நிர்வாகசபை ... தமாகவும் அடிப்படைப் ... னைகள் சம்பந்தமாகவும் ஒ... கப் பேசவேண்டுமென என... யிருந்த போதிலும் தான் தற்... விட்டுக்கொடுப்புடன் இடைக்... நிர்வாகம் சம்பந்த மாக ம... பேசுவதற்குத் தயாராக இரு... தாகக் கூறினார். அ... வாக்குறுதியின் அடிப்படை... இவ்விடயம் தாமதமாக்கப்பட... பேசினால் தான் சமாதானத்... நிலைப்படுத்த முடியும் என... அடிப்படையில் திட்டங்... வகுத்து வருகின்றோம்.

## தமிழரின்...

அடிப்படையில் எங்களுடைய அனைத்துப் பாராளுமன்ற உறுப் பினர்களும் தீவிரமாகச் செயற் படுவதாக உறுதியெடுத் திருக் கின்றார்கள். இது எங்க ளுக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்திருக் கின்றது. தற்பொழுது தமிழ்த் தேசியத்திற்கெதிராகவும், தமிழர் தரப்பினால் முன்வைக்கப் பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை சம்பந்தமாகவும் பல தவறான விமர்சனங்களும் பரப்புரைகளும் செய்யப்பட்டு வருவதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். அவர் களுக்குச் சரியான விளக்கத்தைச் சகல மட்டங்களிலும் முன்னெடுப் பதற்காக அவர்கள் இன்று உறுதி பூண்டிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளும் அவர்களோடு இணைந்து சர்வதேச சமூகத்திற் கும் எல்லாத்தரப்பிற்கும் எங்க ளுடைய நியாயப்பாடு களையும், நிலைப்பாடுகளையும் முன்னெ டுத்துச் செல்வதற்கு உறுதி பூண்டிருக்கிறார்கள்.

★இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு நீங்கள் ஏதே னும் தமிழ்த் தேசிய கூட்டமைப் பினருடன் கலந்து பேசி இருக் கிறீர்களா?இது பற்றி என்ன தீர்மானம் எடுத்திருக்கிறீர்கள்?

நிச்சயமாக, நாங்கள் பாராளு மன்றத்தில் எங்களுடைய நிலைப் பாடுகளை முன்னெடுத்துச் செல் வதற்கான செயற்பாட்டுக் குழு வொன்றை அவர்கள் இன்று அமைத்துள்ளார்கள். அதே போன்று தமிழர் தாயகப்பகுதி யிலே தமிழ்த் தேசியத்தையும் தமிழ் மக்களுடைய தலைமை சம்பந்தமான சரியான விளக் கத்தை தெளிவை ஏற்படுத்துவதற் கான குழு ஒன்றை அமைத்திருக் கின்றார்கள். அதேபோன்று தென் இலங்கை சமூகத்திற்கும் தமிழர் தரப்பு நியாயங்களையும், நிலைப் பாடுகளையும் எடுத்துச் செல்வதற் கும் பாராளுமன்ற அங்கத்தவர் களைக் கொண்ட குழுஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதே போல் சர்வதேச அளவிலும் இராஜ தந்திர நடவடிக்கைக்குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதாவது சர்வதேச சமூகத்திற்குத் தமிழர் தரப்பினர் நிலைப்பாடு களை விளக்குவதும். தெளிவாக்கு வதும் நோக்கமாகக் கொண்ட குழுவாக அமைத்து செயற்படுவ தாக முடிவு எடுக்கப்பட்டிருக்கி றது.

★இப்போது பாராளுமன்றத் தில் அங்கத்துவம் வகிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களது பதவிகள் வெளியில் இருக்கிற வர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கு வதற்காக ஏதாவது ஆராயப்பட் டதா? அல்லது ஏதாவது தீர்மானம் எடுக்கப்பட்டதா? அல்லது அந்த மாதிரியான எண்ணம் இருக் கிறதா?

பொதுவாக இன்றைய சந்திப் பின்போது சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தீவிரமாகச் செயற்படுவதற்கான வேலைத்திட் டங்களை வகுத்துள்ளார்கள். அத்தோடு வெளியில் புத்தி ஜீவிகள், தேசப்பற்றுள்ளவர்கள், இனப்பற்றுக்கொண்டவர்கள் பலர் இன்று ஆலோசனை வழங்கிச் செயற்படுவதற்கு முன்வந்திருக் கிறார்கள் முன்வருவதற்குத் தயா ராக இருக்கிறார்கள்.

அவர்களையும் உள்வாங்கிப் பரந்தளவில் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்திருக்கிறார்கள்.

★இப்பொழுது இடைநின்று போன சமாதானப் பேச்சுவார்த் தைகளை எப்படியாவது ஆரம் பிக்கவேண்டிய கட்டாய தேவை இருக்கிறது. இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நீங்கள் அடுத்து என்ன நடவடிக்கை எடுத்தி ருப்பதாகத் தீர்மானித்திருக் கிறீர்கள்?

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக அவர் கள் பொறுத்திருந்து, காத்திருந்து சலிப்படைந்து போயுள்ளனர். அவர்கள் முற்றாக நம்பிக்கையீ னம் அடைகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையை விளக்கி விரைவில் ஒரு பேச்சுவார்த் தையை தொடக்கித் தமிழ்மக்க ளுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்பது எல் லோருடைய கருத்தும். அதற்கு- இன்று சிறிலங்கா அரசாங்கமோ அல்லது சிறிலங்கா அரசாங்கத் தோடு சம்பந்தப்பட்ட கூட்டுக் கட்சி களோ, ஒரு நிலைப்பாட்டை எடுக் காத நிலையில் மிகவும் ஒரு நெருக்கடிநிலை நோக்கி இந்தச் சமாதான சூழல் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை நாங்கள் பரந்தளவில் நிலைப்பாட்டைத் தெளிவாக்கி இதற்கான ஒரு நிலைப்பாட்டை இந்த அரசாங்கம் எடுப்பதற்கு ஒரு அழுத்தத்தை சர்வதேச சமூகம் கொடுக்கக்கூடிய ஒரு நிலைப் பாட்டிற்குக் கொண்டு வருவதற் கான முயற்சிகளை எல்லாமட்டங் களிலும் தீவிரப்படுத்த முனைந் திருக்கிறோம். நிச்சயமாக இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள் விரைவில் தொடங்கப்பட வேண் டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடும், எல்லோருடைய நிலைப்பாடும்.

★கிழக்கில் குறிப்பாக மட்டக் களப்பு மாவட்டத்தில் நிலவுகின்ற அச்சம் கொண்ட ஒரு நிலைமை அமைதியற்ற சூழ்நிலை இத னைப் போக்குவதற்கும் அதே போல், வடக்கில் யாழ். குடா நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு சென்று மீளக் குடியேறுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான இன்றைய கூட்டத்தில் ஏதேனும் ஆராய்ந்தீர்களா?

இந்த விடயங்களை நாங்கள் இன்று விரிவாக ஆராய்ந்திருக் கின்றோம். அதாவது இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நடக் கின்ற கொலைகள் சம்பந்தமாக வும் பரந்தளவில் யுத்த நிறுத்தத் திற்கு ஏற்பட்டு இருக்கின்ற அச்சுறுத்தல்களை விரிவாக ஆராய்ந்திருக்கின்றோம். குறிப் பாக, இந்த யுத்த நிறுத்த உடன் படிக்கையின்படி வடக்கு-கிழக்கில் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட்டு அவர் கள் வடக்கு-கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பது யுத்த நிறுத்த உடன்படிக் கையில் இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால், அதை மீறி இன்று ஆயுதக் குழுக்களை செயற்பட அனுமதித் திருப்பதுதான் இந்த கொலை களிற்கான காரணமாகவுள்ளது. கொலைகள் நிறுத்தப்பட வேண்டு மானால், யுத்த நிறுத்த உடன் படிக்கையில் ஏற்றுக் கொண்ட நடைமுறைகளைப் பேணி மதித்து நடப்பதுதான் பொருத்தமானது. ஆகவே, படைத்தரப்பும், அர சாங்கமும் இந்த ஆயுதக் குழுக் களது செயற்பாடுகளை முடி விற்கு கொண்டுவந்து அவர்களது நடவடிக்கையினை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை களை எடுப்பதுதான் இந்த கொலை களை நிறுத்துவதற்கான நடவ டிக்கை என நாங்கள் கருதுகின் றோம். அந்த விடயத் தையும் நாங் கள் இன்று ஆராய்ந் துள்ளோம். இதை நாங்கள் எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டு போவ தற்கும் நாங்கள் தீர்மானம் எடுத்திருக்கின்றோம்.

அத்தோடு, நீங்கள் கேட்ட உயர் பாதுகாப்பு வலயங்களில் இன்னும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குப்போக முடியாமல் மிகவும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கின்றார்கள். இந்த மக்களுக்கு இரண்டரை வருட கால அமைதிச் சூழலிலும் உரிய நிவாரணங் களோ அல்லது அவர்களது துன்பங்களுக்கு எந்தத் தீர்வும் முன்வைக்காது இன்று அவர்கள் மத்தியில் பெரிய விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு

மனிதாபிமானத் தேவை. ... உடனடியாகத் தீர்வுகாண ... மட்டத்திலும் எங்களுடைய ... பாடுகளை சகலரும் ...ிர... துவதெனத் தீர்மான... டு... கின்றோம் என்றார். ...ழ்க் ... மைப்பு பாராளுமன்ற ... களைத் தமிழீழ விடுதலை... களின் அரசியல்துறை... பொ... பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை... நேற்றுக் காலை 10 மணிய... சந்தித்துக் கலந்துரையாடி...

இக் கலந்துரையாடலில் இ... பந்தன் உட்பட அனைத்... பாராளுமன்ற உறுப்பினர் ... கலந்துகொண்டதோடு த... விடுதலைப்புலிகளின் மா... யல்துறைப் பொறுப்பாளர் ... கலந்து கொண்டனர். (...

## மீளக் குடியமர...

மராட்சி தெற்கின் தனங் கிளப்பு, மறவன் புலோ, எழுது மட்டுவாள், கிளாலி பகுதி மக் களே மீளக்குடியமர தம்மை அனு மதிக்கக் கோரும் இம் மகஜரை கையளிக்கவுள்ளனர்.

தம்மை மீளக்குடியமர அனும திப்பதற்கான துரித நடவடிக்கை களை விரைவுபடுத்தி எடுக்க வேண்டுமெனவும் தவறின் யாழ். குடாநாட்டிற்கான பிரதான போக்கு வரத்துப் பாதையாக உள்ள கண்டி வீதியினை துண்டித்து தொடர் மறியல் போராட்டத்தில் தாம் குதிக்க வேண்டிய சூழல் ஏற்படுமென்பதை தாம் இம்மக ஜரில் வலியுறுத்தியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

## தம்புள்ள...

பயணித்த இளைஞ... லேயே பலியானதாகத் ... துள்ளது. மல்லாவியை ... மாகக் கொண்ட பாலகிருஷ... பாஸ்கரன் (வயது 19) என்ற ... ஞரே மேற்படி சம்பவத்தில் ஸ்த... தில் பலியானவர் என்பது கு... பிடத்தக்கது. (சோ.(...


THIRU ENGLISH

திருநகர், 87
கிளிநொச்சி (மஞ்சுளா வெதுப்பகச்சந்தி)

பல்கலைக்கழகப் புகுமுக மாண வர்களின் ஆங்கிலத் தேவையைக் கருத்திற் கொண்டு விசேட அணி (Bateh) செப்ரெம்பர் 06ஆம் திகதி காலை 06. 30 மணிக்கு ஆரம்பம்.

நிர்வாகம்

(5016)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.